வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.01.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 05 பக்கங்கள் : 12

# வடக்கின் அபிவிருத்தியில் அனைவரும் இணையுங்கள்

## மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

- தைப்பொங்கலுக்கு பின் அரச ஊழியர்களுக்கு நிவாரணம்
- காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கு 6 மாதத்தில் தீர்வு
- புலம்பெயர்ந்தவர்களும் நாட்டில் முதலீடுகளை செய்யலாம்
- காணி விடுவிப்பு தொடர்பில் பெப்ரவரியில் இறுதி தீர்மானம்
- வடக்கின் வலுசக்தி கேந்திர மையமாக பூநகரி மாற்றப்படும்

யாழ்ப்பாணம், ஜனவரி 05

**வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டமிடலை தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்துகொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



அத்துடன், தைப்பொங்கலின் பின்னர் அரச ஊழியர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கும். நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர் மக்களுக்கு பொருளாதார நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பேன் 11



# இடம்பெயர்ந்தவர்கள் அனைவரும் 2025இற்குள் மீள்குடியேற்றப்படுவர்!

## ரணில் விக்கிரமசிங்க உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 05

இடம்பெயர்ந்தவர் கள் அனைவரும் 2025 ஆம் ஆண்டுக்குள் மீள் குடியமர்த்தப்படவேண்டும் - என்று அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நான்கு நாட்கள் பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாணத்துக்கு வருகைதந்துள்ளார். நேற்றைய தினம் யாழ்ப் பாணம் வந்த அவர் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் 11

# ஐக்கிய தேசிய கட்சி பலமாக வேண்டும்!

## சொல்பவர் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜன. 05

ஐக்கிய தேசியக் கட்சி கிராம மட்டத்திலிருந்து பலப்படுத்தப்பட வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து இன்னமும் அந்தக் கட்சியு டன் பேச்சு ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். 11

# யாழ். வந்த ஜனாதிபதிக்கு எதிராக கச்சேரியின் முன்பாக போராட்டம்!

## த. தே. ம. முன்னணியினர் மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 05

ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்ட செயலகம் அருகே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மூன்று பேர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வடக்குக்கு நான்கு நாள் பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்தார். உலங்கு வானூர்தி மூலம் (ஹெலி) யாழ்ப்பாணம் வந்த அவர், மாவட்ட செயலகத்துக்கு மாலை 4.10 மணியளவில் வருகை 11





# ரயில் கடவை ஊழியர்கள் நேற்று முதல் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 05

சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு - கிழக்கில் உள்ள புகையிரத கடவை காவலர்கள் நேற்று முதல் இரண்டு நாள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஜனாதிபதியின் வடக்கு வருகையை ஒட்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. 11

# ‘யுக்திய’ நடவடிக்கை தொடரும்!

## அமைச்சர் டிரான்

கொழும்பு, ஜன. 05

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் நாட்டில் முன்னெடுக்கப்படும் போதைப் பொருள் தொடர்பான கைது நடவடிக்கையை தொடர்ந்தும் 11

# மின்கட்டணத்தை 50 வீதம் குறைப்பதற்கு எதிர்பார்ப்பு!

## இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05

மின்சார கட்டணத்தை 50 சதவீதத்தால் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாத காலமாக நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலையால் நீர் மின்னுற்பத்தியில் சாதகமான நிலை காணப்படுகிறது. ஆகவே, அதன் பயனை மின் பாவனையாளர்களுக்கு வழங்குவோம் என மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பத்திரகே தெரிவித்தார். 11

# குற்ற செயல்களுடன் தொடர்பு 343 பேர் கடற்படையால் கைது!

## 715 கிலோ ஹெரோயின் 2023இல் மீட்பு

கொழும்பு, ஜன. 05

இலங்கை கடற்படையால் கடந்த ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 343 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 715 கிலோ ஹெரோயின், 3,711 கிலோ கேரள கஞ்சா, 50 கிலோ உள்நாட்டு 11

# கிழக்கில் கனமழை தொடரும்!

யாழ்ப்பாணம், ஜன.05

வடக்கில் இன்று முதல் 9ஆம் திகதி வரை மழை வீழ்ச்சி பதிவாகும் அதே நேரம், கிழக்கு மாகாணத்தில் மிகக்கனமான மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 11

## இப்படியும் நடக்கிறது

ஒரு நண்பர் அதிகாலை போனில் தொடர்பில் வந்தார். இந்த ஊர்க்குருவியின் தீவிர வாசகர் அவர். அதிகாலை அவர் அழைப்பை எடுக்கிறார் என்றால், அவர் ஊர்க்குருவியின் பத்தியைப் படித்துவிட்டார் என்பதுதான் அதன் அர்த்தம்.

எடுத்த எடுப்பில் கேட்டார், 'அதுசரி எல்லா விடயங்களையும் எழுதுகிறீர்களே, இந்த ரணில் தேர்தலையும் அறிவித்துவிட்டு அதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் காரியங்களைச் செய்கின்றாரே அது ஏன் என்று நினைக்கிறீர்கள்' என்று கேட்டார்.

அவர் வரி அதிகரிப்பைத்தான் சொல்கிறார் என்பது புரிந்தது. ஆட்சியில் இருப்பவர்கள் எல்லோரும் எப்போதும் தேர்தல் வருகின்றது என்றால் மக்களுக்கு சலுகைகளாக அறிவிப்பார்கள். அரச ஊழியர்களுக்கு சம்பளத்தைக் கூட்டுவார்கள். அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைப்பார்கள். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமோ, இந்த ஆண்டை தேர்தல் ஆண்டாகவும் அறிவித்துவிட்டு, இப்படி வரியை அதிகரிப்பது குறித்து அவர் தனது விசனத்தைத் தெரிவித்தார்.

'வரிகளை அறவிடுவது கட்டாயமானதுதான். ஆனால், அதற்காக இந்த வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறுபவர்களுக்குமா இப்படி தண்டப் பணத்தை அதிகரிக்கவேண்டும்?' என்று கேட்டார் நண்பர்.

'மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டினால், தண்டப் பணம் இருபத்தி ஐந்தாயிரமாக இருந்தது. அதனை இந்த ஜனவரியில் இருந்து ஐம்பதாயிரம் ஆக்கியிருக்கிறார்கள். இதனால் அரசாங்கத்துக்கும் வருமானம் வரப்போவதில்லை. பொலிஸார், ஐம்பதாயிரம் ரூபாய் கட்டுவதற்கு பதிலாக பத்தாயிரத்தை தாருங்கள் என்று அவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கத்தானே அது உதவும். இது அரசாங்கத்துக்கு எந்த வகையிலும் வருமானத்தை அதிகரிக்கப் போவதில்லையே' என்றார் நண்பர்.

அவர் சொல்வதிலும் ஏதோ ஒருவகையில் நியாயம் இருப்பதுபோல இருந்தது. ஆனால், அதற்காக சட்டவிரோதமாக - அதுவும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது என்பது ஓட்டுபவருக்கு மாத்திரம் தீங்கு விளைவிக்கக்கூடியது அல்ல. அது வீதியில் சென்றுகொண்டிருக்கின்ற அப்பாவிகளுக்கும் ஆபத்தை விளைவிக்கலாம். முதலில் ஆயிரத்தையோ இரண்டாயிரத்தையோ கொடுத்துவிட்டு தப்பித்துக் கொள்கின்ற இந்த சமூக விரோதிகள் இனி பல ஆயிரங்களை கொடுக்கவேண்டியிருந்தால் அடுத்த தடவை இந்தத் தவறை செய்ய விரும்ப மாட்டார்களே என்று நண்பருடன் தர்க்கித்தேன்.

ஆனால், அவரது வாதம் எல்லாம் இந்த ரணில் இதையெல்லாம் இப்போது ஏன் செய்யவேண்டும் என்பதுதான்.

மது அருந்திவிட்டு, வாகனம் ஓட்டுபவரை கண்டுபிடிக்க பொலிஸார் பலூன் ஒன்றை ஊதுவதற்கு கொடுப்பார்கள். அந்த பலூனை ஒரு தடவை ஊதிவிட்டால் அது அவர் மது அருந்தியதை பதிவு செய்துவிடும். அவ்வாறு பலூன் காட்டிக்கொடுத்த பின்னர், அந்த பலூனில் எந்த மாற்றமும் செய்யமுடியாது என்பதால், தவறு செய்தவர் முழு தண்டப்பணத்தையும் செலுத்தியே ஆகவேண்டும் என்று விளக்கமளித்தார் பொலிஸ் அதிகாரி ஒருவர்.

அந்த நண்பரின் இந்த 'முறைப்பாடு' பற்றி தெற்கில் ஊடக நண்பர் ஒருவரிடம் சொல்லி அவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம் என்று நினைத்தேன்.

அவரிடம் எதற்காக இப்படி இலங்கையில் எப்போதும் இல்லாததுபோல எரிபொருள், மின்சாரம் போன்றவற்றிற்கும் பெறுமதி சேர் வரியை இப்போது ரணில் அறிமுகம் செய்கிறார். அது தேர்தலில் அவரது வெற்றியை பாதிக்காதா? என்று கேட்டேன்.

அதற்கு அவர் சொன்ன பதில் சற்று வித்தியாசமானது.

'ரணில் மற்றைய எல்லா அரசியல்வாதிகளிலும் பார்க்க தன்னை வித்தியாசமானவராகக் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறார். அவருக்கு தனது வெற்றியிலும் பார்க்க, இந்த நாட்டை பொருளாதார ரீதியில் தூக்கி நிமிர்த்த வேண்டும் என்பதுதான் குறியாக இருக்கின்றது. அவர் அதனைச் செய்யாவிட்டால் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்கமுடியாது என்று நம்புகின்றார். அப்படி மீட்ட பின்னர், அவர் செய்தது சரி என்று மக்கள் நம்புவார்கள் என்றும் நினைக்கின்றார்' என்றார் நண்பர்.

அப்போது நான் சொன்னேன்:

'அவர் செய்தது தவறு என்று மக்கள் நினைத்து வேறு ஒருவரை ஆட்சியில் அமர்த்தினால், அவர் இந்த வரிகளையெல்லாம் இரத்துச் செய்வார். பிறகு நாடு முன்னரைவிட பெரிய நெருக்கடியை எதிர்கொள்ளும். ஆட்சியில் இருப்பவரே விட்டுவிட்டு ஓடவேண்டி வரும். அப்போது அவரே தன்னை மீண்டும் ஆட்சியைப் பொறுப்பெடுங்கள் என்று கேட்பார் என்று நினைக்கின்றாரோ தெரியவில்லை' என்றேன் நகைச்சுவையாக.!

**- ஊர்க்குருவி.**

## பொன்னாவெளி மக்களின் பிரச்னைகளை பாராளுமன்றில் வெளிப்படுத்துவதாக உறுதி!

### அநுரகுமார திஸநாயக்க வழங்கினார்

**கொழும்பு, ஜன. 05**

**பூநகரி - பொன்னாவெளி மக்களின் பிரச்னைகளை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்த உள்ளதாக அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்**



கிளிநொச்சி - பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றிய பிரதிநிதிகள் கொழும்பில் வைத்து புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டத்துக்கு நேரடியாக வருகைதந்த ஜே. வி. பியினர் போராட்டத்துக்கு தமது ஆதரவை வெளிப்படுத்திய நிலையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, " சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் பல கிராமங்கள் அழிவடையும். கடல் நீர் உட்புகும். கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர வேண்டிவரும்" எனப் பல விடயங்களை அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இவற்றைக் கேட்டறிந்த அநுரகுமார பொன்னாவெளி மக்களின் பிரச்னைகளை வெளி உலகத்துக்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பாக பாராளுமன்றத்தில் இது தொடர்பாக வெளிப்படுத்துவதாகவும் போராட்டக்காரர்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதாகவும் உறுதியளித்தார்.

(ஐ)

## மின்சார சபையை சேர்ந்தோருக்கு அரச வளாகங்களுக்குள் நுழைய தடை!

கொழும்பு, ஜன. 05

இலங்கை மின்சார சபையின் தொழில் சங்கத் தலைவர் ரஞ்சன் ஜெயலால் உள்ளிட்டோர் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி வளாகங்களுக்குள் பிரவேசிக்க தடை விதித்து கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிராக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கடந்த புதன்கிழமை மூன்று நாள் எதிர்ப்புப் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது.

பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அரச சொத்துகளுக்கு சேதம் விளைவிக்காத வகையிலும் போராட்டத்தில் ஈடுபடுமாறு நீதிவான் திலின கமகே, பேராட்டத்தில் ஈடுபடுவோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜன. 05

பண்டாரகமை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 4 இளைஞர்களை பண்டாரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யுக்திய நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பிலேயே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 6 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 28 கிராம் நிறையுடைய ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையில் இந்தப் போதைப்பொருட்கள் குற்றத் தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாணந்துறை 'குடுசலிந்து' என்ற சலிந்து மல்ஷித குணரத்னவுக்கு சொந்தமானது எனவும் அவற்றை விற்பனை செய்வதற்காக பொதிகளாக தயாரிக்கப்பட்டன என்றும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் மூவர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பண்டாரகமவில் உள்ள வீடொன்றில் இருந்த 52 கிலோ நிறையுடைய போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பதும் தெரிய வந்தது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான 'குடுசலிது' பிரதேசத்தை விட்டு தப்பிச்சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

(ஐ)

## 5 'மெகா சதொச' கிளைகள் இந்த ஆண்டு திறக்கப்படும்!

கொழும்பு, ஜன. 05

லங்கா சதொச நிறுவனம் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஐந்து புதிய மெகா கடைகளையும் பத்து தினசரி லங்கா சதொச கடைகளையும் திறக்க இலக்கு வைத்துள்ளதாக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வருட இறுதிக்குள் லங்கா சதொச விற்பனை நிலைய வலையமைப்பை 500 விற்பனை நிலையங்களாக விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



"வலையமைப்பை 500 விற்பனை நிலையங்களுக்கு விரிவுபடுத்துவதன் நோக்கம் நுகர்வோர், அரசு மானிய விலையில் தட்டுப்பாடு இல்லாமல் பொருட்களை வாங்குவதாகும் " என்று அவர் கூறினார்.

2024 ஆம் ஆண்டில், லங்கா சதொசவின் மொத்த வருமானத்தை கிட்டத்தட்ட ரூ. 70 பில்லியன் ஆக உயர்த்துவதே இலக்காகும்

நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கான புதிய திட்டம் 2024 இல் நுகர்வோர் உரிமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அளவீட்டு அலகுகள், தரநிலைகள் மற்றும் சேவைகள் ஆகியவை முழுமையாக கணினிமயமாக்கப்படும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(அ)

Eelanadu
05.01.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பந்து ரணிலின் பக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் சந்திப்புகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார் – யாழ்ப்பாணத்துக்கான வருகைக்கு முன்னதாக அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்காக தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். தமிழ் கட்சிகளுக்கு விக்கிரமசிங்க அழைப்பு விடுப்பது இது முதல் தடவையல்ல. அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதற்கான அழைப்பை விடுப்பதற்கு முன்பதாக அவர் சில விடயங்களை செயலில் காண்பிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராளுமன்றத்தில் பலம் இல்லாமல் இல்லை என்பது உண்மை. ஆனால், அவ்வாறானதொரு சூழலில்கூட, தான் நினைத்த விடயங்கள் அனைத்தையும் பாராளுமன்றத்துக்குள் நிறைவேற்றியிருக்கின்றார். ஏனெனில், அவருக்கு ஏதோவொரு வகையில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர். எனவே, ஒரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்னும் வகையில் அவர் சில விடயங்களில் முன்னேற்றங்களைக் காண்பிக்க வேண்டும் – அது அவரால் முடியாத காரியமல்ல. ஆனால், இதுவரையில் அவர் செயலில் தனது ஈடுபாடுகளை நிரூபிக்கவில்லை.

அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருந்தார். ஆனால், இன்றுவரையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஜனாதிபதி தேர்தலின் பின்னர்தான் அரசமைப்பு விடயங்களைக் கையாள முடியுமென்று அண்மைய சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி தேர்தலின் பின்னரும் விடயங்கள் நடைபெறும் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? அரசாங்கத்தின் அங்கமாக இருக்கின்ற தமிழ் கட்சிகள் மற்றும் தனி நபர்களின் பிரச்னை ஒன்றுதான் – அதாவது, அவர்களுக்கு அமைச்சரவையில் கதிரை வேண்டும் – அது கிடைத்தால் அவர்களின் பிரச்னை முடிந்தது. தமிழ் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுதல் என்பதன் பொருள் அது மட்டும்தானா?

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்டிருக்கும் கட்சிகளின் பிரச்னை வேறு – அவர்களின் இலக்கு தமிழ் மக்கள் தங்களுடைய அலுவல்களை தாங்களே கையாளக்கூடிய அதிகார அலகு. அது 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து நகர்வதிலும் கட்சிகள் மத்தியில் பெரிய பேதங்கள் தற்போது இல்லை. அவ்வாறிருந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை கோரியிருக்க மாட்டார்கள்.

இப்போது பந்து ரணிலின் பக்கத்தில்தான் இருக்கின்றது. அது நிச்சயமாகத் தமிழ் கட்சிகளின் பக்கத்தில் இல்லை. முன்னேற்றங்களை காண்பிக்காது வெறுமனே மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பங்கு கொள்வதன் ஊடாக மட்டும் பிரச்னைகளைக் கையாள முடியாது.

அபிவிருத்தி முக்கியமானது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அபிவிருத்தி தொடர்பில் பேசுகின்றபோது, அந்த அவிருத்தி, நீடித்து நிலைக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு அதிகாரங்கள் அவசியம். மாகாண சபைகள் இயங்குவது அவசியம் – அதிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் வழங்கப்பட வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் ரணிலுக்கு பின்னர், ஜனாதிபதி கதிரையில் அமர்பவர் அனைத்தையும் சூறையாடிவிடலாம்.

இங்கு ரணில் விக்கிரமசிங்க எந்தளவு நல்லவர் – அவருக்கு எந்தளவு அனுபவம் இருக்கின்றது என்பதல்ல பிரச்னை. மாறாக, தமிழ் மக்கள் அதிகாரங்களை பிரயோகிப்பதற்கான அரசியல் சூழல் நீடித்து நிலைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது நல்ல தனி நபர்கள் அல்ல – மாறாக, அடிப்படையான கட்டமைப்பு மாற்றங்களாகும்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 200 குடும்பங்களுக்கு உலருணவு



*வடமராட்சி, ஜன. 05*

*வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 200 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று முன்தினம் உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.*

*அம்பாறையின் லகுகல கிராம சேவகர் பிரிவில் 60 குடும்பங்களுக்கும் பாணமை, அபயபுர பகுதிகளில் 110 குடும்பங்களுக்கும் பாணமை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 30 குடும்பங்களுக்குமாக மொத்தம் 200 குடும்பங்களுக்கு மொத்தமாக 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.*

*இதே வேளை கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி முல்லைத்தீவின் கேப்பாபுலவு - பிலக்குடியிருப்பில் உள்ள செங்கதிர் முன்பள்ளியில் கல்வி கற்கும் 10 மாணவர்களுக்கும் கேப்பாப்புலவு சூரி முன்பள்ளியில் கல்விகற்கும் 30 மாணவர்களுக்கும் 55 ஆயிரம் பெறுமதியில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.*

*அத்துடன், ஜேர்மனியை சேர்ந்த திருமதி மனோன்மதியின் பிறந்த நாள் கொடையாக பிலக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் 18 குடும்பங்களுக்கும், வற்றாப்பளை கிராம சேவகர் பிரிவில் 35 குடும்பங்களுக்கும், 2 இலட்சத்து 65 ஆயிரம் பெறுமதியான உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.*

*இதேசமயம், சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வில் கடந்த 29ஆம் திகதி வடமராட்சி கிழக்கு - வெற்றிலைக்கேணி - முள்ளியானை சேர்ந்த பெண் தலைமை குடும்பத்தை சேர்ந்த - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கும், உடுவில் தெற்கு பட்டியோடையை சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கும் வீடு திருத்தப் பணிகளுக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.*

*அத்துடன், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 120 குடும்பங்களுக்கு 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான உலருணவு பொருட்கள் வழங்கப்பட்டன.*

*இந்த உதவிகள் அனைத்தும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தனது தொண்டர்கள் சகிதம் நேரடியாக சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)*

*பருத்தித்துறை தீ விபத்து;*

# உயிரிழந்த சகோதரர்களின் மாதிரிகள் கொழும்புக்கு!

*வடமராட்சி, ஜன. 05*

*பருத்தித்துறை முனைப் பகுதியில் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் சிக்கி உயிரிழந்த மலையக சகோதரர்கள் இருவரின் உடல் கூறு மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*பருத்தித்துறை முனைப் பகுதியில் மீன் ஏற்றுமதி நிறுவனத்தின் களஞ்சிய சாலை கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு கடந்து ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு பணியாற்றிய இரு சகோதரர்கள் தீயில் கருகி உயிரிழந்தனர்.*

*இந்த உடலங்கள் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன. அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில், இதில் உயிரிழந்தவர்களின் சிறுநீரகம் மற்றும் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு கொழும்பில் உள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.*

*இந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னரே முழுமையான பிரேத பரிசோதனை அறிக்கை வழங்க முடியும் என சட்ட மருத்துவ அதிகாரி கே. வாசுதேவா தெரிவித்தார்.*

*இதையடுத்து இருவரின் சடலங்களும் நேற்று மாலை உறவினர்களிடம் கையளிக்கட்டன. (ஐ-02)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 05 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி




**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டுக் கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள்.புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரிகளுடன் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்

**விருட்சிகம்**
உங்களுடைய ஆலோசனைகளை எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கடமை உணர்வுடன் செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மகரம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகள் குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

*அலங்காநல்லூரில்*

# ரூ. 44 கோடி செலவில் ஜல்லிக்கட்டு அரங்கம்!

மதுரை, ஜன. 05

அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் 5,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வகையில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு அரங்கை பொங்கல் பண்டிகையின்போது முதல்வர் மு. க. ஸ்டாலின் திறந்து வைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன.

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு மிகவும் புகழ்பெற்ற இடமாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் திகழ்கிறது. 2017ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு ஆதரவு போராட்டத்துக்குப் பின் நேரடியாக இப்போட்டியைக் காண தமிழகம் மட்டுமின்றி வடமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து அலங்காநல்லூருக்கு பார்வையாளர்களின் வருகை அதிகரித்தது. ஆனால், அவர்கள் அமர்ந்து போட்டியைப் பார்க்க அலங்காநல்லூரில் போதிய பார்வையாளர் வசதிகள் இல்லாமல் ஒவ்வோர் ஆண்டும் வெளியூர்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் ஏமாற்றுத்துடன் திரும்பினர்.

அலங்காநல்லூர் வாடிவாசல் அருகே வெளிநாட்டினருக்காக நிரந்தரமாக பார்வையாளர் அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சுற்றலாத் துறை, அவர்களை வாகனங்களில் அலங்காநல்லூர் அழைத்து வந்து இந்தப் போட்டியை காண ஏற்பாடு செய்யும். இருப்பினும் வெளிநாட்டினர் இந்தப் போட்டியை முழுமையாகக் காண முடியாமல் ஏமாற்றமடைவர்.

அதனால், ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்துவதற்கென்று நிரந்தரமாக ஓர் அரங்கம் அமைக்கப்படும் என்று சட்டமன்ற கூட்டத்தொடரில் விதி 110-ன் கீழ் முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி, அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரையில் இடம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான கட்டுமான பணிகளை 2023ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். 66.8 ஏக்கரில் ரூ. 44 கோடியில் ஒரே நேரத்தில் 5 ஆயிரம் பேர் அமர்ந்து கண்டுகளிக்கும் வகையில் இந்த அரங்கம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இந்த அரங்கில் செய்யப்பட்டுள்ளன. தரைத்தளத்தில் வாடிவாசல், நிர்வாக அலுவலகம், மாடுபிடி வீரர்களுக்கான இடம், காளைகள் பரிசோதனைக் கூடம், முதலுதவிக் கூடம், பத்திரிகையாளர் கூடம், காளைகள் பதிவு செய்யும் இடம், அருங்காட்சியகம், பொருட்கள் பாதுகாப்பு அறைகள் இடம்பெற்றுள்ளன.

ஆரம்பத்தில் இந்த அரங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பாரம்பரிய ஜல்லிக்கட்டு பாதிக்கப்படும் என்றே அந்த ஊர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால், இந்த பிரமாண்ட அரங்கில் ஜல்லிக்கட்டு நடந்தாலும், பாரம்பரியமாக அலங்காநல்லூரில் நடக்கும் ஜல்லிக்கட்டு போட்டி தடையின்றி நடக்கும் என்று தமிழக அரசு உறுதிளித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாடு அரசின் கோரிக்கையை மத்திய அரசு நிறைவேற்றவேண்டும்

## அன்புமணி ராமதாஸ் தெரிவிப்பு

சென்னை, ஜன. 05

சென்னையில் மழை, வெள்ளம் பாதித்து ஒரு மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழக அரசு கோரிய நிதியை தாமதமின்றி மத்திய அரசு வழங்க வேண்டும் என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அன்புமணி ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில்,

“சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பேரிடர் நிகழ்ந்து ஒரு மாதம் நிறைவடைந்துவிட்டது. ஆனால், மழை, வெள்ள பாதிப்புகளை சரி செய்வதற்காக தமிழக அரசின் சார்பில் கோரப்பட்ட நிதி மத்திய அரசால் இன்று வரை வழங்கப்படாதது மிகுந்த வருத்தமளிக்கிறது.

தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று மழை, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்வதற்காக கடந்த டிசெம்பர் 11 ஆம் தேதி சென்னை வந்த மத்தியக் குழு 4 நாள் ஆய்வுக்குப் பிறகு டிசம்பர் 14 ஆம் திகதி டில்லி சென்றடைந்தது. 20 நாட்கள் கடந்தும் வெள்ளப்பாதிப்பு குறித்த அறிக்கை வெளியாகவில்லை.

வெள்ளப் பாதிப்புகளை சரி செய்வதற்காக உடனடி உதவியாக ரூ.7,033 கோடி நிரந்தரப் பணிகளுக்கான உதவியாக ரூ. 12,659 கோடி என மொத்தம் ரூ.19,692 கோடி நிதி வழங்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கோரிக்கை.

உடனடி உதவி என்பது புயல் - வெள்ளம் பாதித்த ஒரு சில நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டிய உதவி ஆகும். ஆனால், ஒரு மாதம் ஆகியும் இதுவரை எந்த உதவியும் வழங்கப்படாததால் மழை -வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, தமிழக அரசு கோரிய மழை, வெள்ள நிவாரண உதவியை மத்திய அரசு விரைந்து வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# “பிரதமர் மோடி தமிழ் மொழியை பொய்யாகப் புகழ்ந்து கூறுகிறார்”

சென்னை, ஜன. 05

பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மொழியை பொய்யாக புகழ்ந்து கூறுகிறார். இதன தமிழ்நாடு மக்கள் நம்ப மாட்டார்கள் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

திருச்சியில் நடந்த விழாவில் பேசிய பிரதமர், வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மீள தமிழக மக்களுக்கு துணை நிற்போம் என்று உறுதி வழங்கியுள்ளார். ஆனால், தமிழக வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து நிதி ஒதுக்க முடியாது என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். மத்தியில் பா. ஜ. க. அரசு அமைந்த கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தின் உரிமைகள் பறிக்கப்படுவதும், அதை எதிர்த்து தமிழக முதல்வர் குரல் கொடுப்பதும் தொடர்கதையாக உள்ளது.

ஆனால், பிரதமர் மோடியோ, ‘உலகில் எந்த இடத்துக்கு சென்றாலும் தமிழகம், தமிழ்மொழி பற்றி புகழ்ந்து பேசாமல் என்னால் இருக்க முடிவதில்லை’ என்று மனசாட்சியே இல்லாமல் உண்மைக்கு புறம்பாக பேசியுள்ளார்.

கடந்த 2017 முதல் 2022 வரை டெல்லியில் உள்ள சம்ஸ்கிருத பல்கலைக்கழகத்துக்கு ரூ.1,074 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், மைசூருவில் உள்ள மத்திய அரசின் இந்திய மொழிகளுக்கான நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.53.61 கோடி மட்டுமே.

தமிழ், கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளுக்காக இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை பொய்யாக புகழ்ந்து கூறுவதை தமிழக மக்கள் நம்பமாட்டார்கள் - என்றார். (ஐ)

# ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக களமிறங்கும் இலங்கை கடற்படையினர்



கொழும்பு, ஜன. 05

செங்கடல் பாதுகாப்பு நடவடிக்கைக்காக இலங்கை கடற்படை கப்பலை அனுப்புவதற்கு உடன்பட்டுள்ளோம் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "ஷில்ப அபிமானி 2023" ஜனாதிபதி கைவினைப் பொருட்கள் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

"உக்ரைன் போர் நடைபெறுகிறது. காசா போர் உள்ளது. அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். செங்கடலில் கப்பல்கள் மீது ஹூதி குழுவினர் நடத்தும் தாக்குதல்களால் கப்பல் போக்குவரத்து ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பல்கள் செங்கடல் ஊடாக பயணிக்காமல் தென்னாபிரிக்காவின் ஊடாக சுற்றி வந்தால் அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிக்கும்.

எனவே, ஹூதி நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஆதரவாக இலங்கை கடற்படையின் கப்பலை செங்கடலுக்கு அனுப்ப உடன்பட்டுள்ளோம்." - எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.(அ)



# வடமராட்சி கிழக்கில் ஒதுங்கிய மர்மபொருள்

யாழ்ப்பாணம், ஜன. 05

உடுத்துறை பகுதியிலுள்ள அரசடி முருகன் கோயில் அருகே மர்மப் பொருளொன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த மர்மப் பொருளை பார்வையிடுவதற்கு ஏராளமான மக்கள் அங்கு வருகை தருவதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த பொருளில் ஏசியா 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஏதாவது கப்பலில் இருந்து குறித்த பொருள் தவறி விழுந்து கரையொதுங்கியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

அண்மைக்காலமாக உடுத்துறை, வேம்படி, நாகர் கோவில், ஆகிய பகுதிகளில் பல்வேறு விதமான மர்ம பொருட்கள் கரையொதுங்கி வருகின்றன. (அ)

# யாழில் 3 நாட்களில் 282 பேருக்கு டெங்கு!



யாழ்ப்பாணம், ஜன. 05

**யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களைத்தவிர ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து செல்வதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றார்கள்.

கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலே டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்பட்டது.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்திலே மருதங்கேணி நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து செல்வதை நாங்கள் அவதானிக்க முடிகிறது.

கடந்த வருடத்திலேயே யாழ் மாவட்டத்திலே 3 ஆயிரத்து 986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த வருடத்தில் முதல் மூன்று நாட்களில் 282 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்- என்றார். (அ)

# விலகிச் சென்ற பங்காளிகளை மீண்டும் அழைக்கிறது மொட்டு

## கதவு திறந்தே உள்ளது என்கிறார் சாகர

கொழும்பு, ஜன. 05

"பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து விலகியவர்களில் முற்போக்கான தலைவர்கள் மீண்டும் எம்முடன் இணைந்து பயணிப்பதற்கான கதவு திறந்தே உள்ளது." - என்று அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த ஷான் விஜயலால் பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் அல்லர். சுதந்திரக் கட்சி உறுப்பினரான அவர் தேர்தலில் கூட்டணியாக எம்முடன் போட்டியிட்டார். அவர் எதிரணிக்கு சென்றது எமக்கு தாக்கம் அல்ல.

எது எப்படி இருந்தாலும் எமது கட்சிக்கு எதிராக கடந்த காலங்களில் ஹெலிகொப்டர் கூட்டணி என பல கூட்டணிகள் அமைக்கப்பட்டன. அவை தற்போது உடைந்துவருகின்றன. எனவே, வெளியேறியவர்களில் முற்போக்கு தலைவர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம். இணைந்து பயணிப்பதற்கான சந்தர்ப்பம் அவ்வாறே உள்ளது.

வற் வரி அதிகரிப்பு தொடர்பில் எமக்கும் பிரச்சினை உள்ளது. கட்சி என்ற அடிப் படையில் அதனுடன் நாம் இணங்கவில்லை. எனினும், போலி போராட்டங்கள், பிரச்சாரங்கள்மூலம் அந்நிய செலாவணி தடுக்கப்பட்டது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதை தடுக்கப்பட்டது. இதனை செய்தவர்கள்தான் இன்று வற் வரி அதிகரிப்புக்கு எதிராக கதைக்கின்றனர். " - என்றார். (அ)

# கசிப்பு காய்ச்சிய பெண் கைது!

யாழ்ப்பணம், ஜன. 05

கோப்பாய் பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தி ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று முன் தினம் விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த இருவரிடமிருந்தும் 15 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் குறித்த கைது சம்பவம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வரியை குறைக்குமாறு கோரி சத்தியக்காடு சந்தை வியாபாரிகள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 05

மரக்கறிகள் மீதான வரியினை குறைக்குமாறு கோரி வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வியாபாரிகள் நேற்று வியாழக்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பிரதேச சபையினால் சந்தையானது ஏலத்திற்கு விடப்பட்டது. ஏலத்தில் எடுக்கும் குத்தகைதாரருக்கு வியாபாரிகள் 4 வீத வரி செலுத்த வேண்டும் என்ற விடயம் ஏற்கனவே அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பிரதேச சபையும் சந்தையை குத்தகைதாரருக்கு வழங்கியது. இந்நிலையில் குறித்த வரி பிரச்னை ஏற்பட்டதனால் குத்தகைதாரர், வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் குறித்த பகுதிக்கு சென்றனர். அவர்கள் அங்கு இருந்த வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கடந்த வருடம் குறித்த குத்தகைதாரர் மனிதாபிமான ரீதியில் ஒரு மூடை மரக்கறிக்கு 60 ரூபா வரி வாங்கியுள்ளார். இந்த ஆண்டு விலைகள் அதிகரிப்பு காரணமாக மரக்கிக்கறிகளுக்கு கிலோவுக்கு மூன்று ரூபாவும், வெங்காயத்துக்கு கிலோவுக்கு ஒரு ரூபாவும், உருளைக்கிழங்குக்குக்கு கிலோவுக்கு இரண்டு ரூபாவும் வரியாக கோரியுள்ளார். அல்லது அனைத்து மரக்கறிகளுக்கும் இரண்டும் ரூபா வரியாக கோரியுள்ளார்.

ஆனால் அந்த வரிப் பணத்தை தங்களால் செலுத்த முடியாது என்றும் ஒரு மூடை மரக்கறிக்கு 80 ரூபா வரியாக தருவதாகவும் அல்லது வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குக்கு கிலோவுக்கு ஒரு ரூபா வரியாக தருவதாகவும் ஏனைய அனைத்து மரக்கறிகளுக்கும் கிலோவுக்கு இரண்டு ரூபா படி வழங்குவதாகவும் வியாபாரிகள் கூறினர்.

இறுதியில் இரண்டு தரப்பினரும் அனைத்து மரக்கறிகளுக்கும் இரண்டு ரூபா வரி செலுத்துவதாக தெரிவித்து இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். (அ)

# பிக்கு கடத்தப்பட்டார்

கொழும்பு, ஜன. 05

கொஸ்கம ஹிங்குரல தெஹி கஹலந்த போதிராஜாராம விகாரையை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் கடத்தப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் விகாரைக்கு வந்த சிலர் பௌத்த பிக்குவை கடத்திச் சென்றதை விகாரையில் பணிபுரியும் ஒருவர் பார்த்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ)

# நாட்டை பற்றி சிந்திக்கும் பயணத்தில் அனைவருமே ஒன்றிணையவேண்டும்!

## அழைக்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜன. 06

**தங்களை விட மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய இந்த பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரித திசேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்ட நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- வரப்பிரசாதங்கள், சலுகைகள், தனிப்பட்ட நன்மைகள், அதிகார பதவிகள் மற்றும் அரசியல் பங்குகளின் அடிப்படையிலான அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முற்றாக நிராகரித்துள்ளன.

இவ்வாறு சேரும் அனைவரும் நிபந்தனையற்ற உன்னத அறிவொளி அரசியலை நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைகின்றனர்.

இந்நாட்டில் நடந்து வந்த, நடந்துவருகிற அரசியல் கட்சித் தாவல்களை தூக்கியெறிந்து, 'தங்களுக்கு முன் நாடும், தங்களுக்கு முன் மக்களும்' என்ற உன்னத கருத்தின் அடிப்படையில் குடும்பவாதமற்ற, மக்கள் வாதத்தைக் கொண்ட அரசியல் கொள்கை ரீதியான பயணத்தை மேற்கொள்வதற்காகவே இந்த கூட்டணி அமைக்கப்படும்.

மனிதாபிமான முதலாளித்துவம், நீதி, நியாயத்தை நிறைவேற்றும் சமூக ஜனநாயகம் எனும் இரண்டு பாதைகளின் ஊடாக ஒரு சீரான நடுநிலையான பாதையில் பயணித்து வருகிறது.

இது சலுகைகள், வரப்பிரசாதங்களை பெறும் இரம்மியமான பயணமன்றி, கடினமான பயணம். தங்களை விட மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய இந்த பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம் -என்றார். (அ)

# மோ.சைக்கிள் மின் கம்பத்தில் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 05

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் பேலியகொடை பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 58 வயதுடைய கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தராவார்.

இவர் செலுத்திய மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து இவர் காயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தேன் விற்பனையாளர்போல் பாசாங்கு செய்து மூதாட்டியின் தாலியை பறித்தவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ்ப்பாணத்தில் அண்மையில் தேன் விற்பனை செய்வது போல பாசாங்கு செய்து மூதாட்டியிடம் 7 பவுண் பெறுமதியான தாலியை அறுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை தொண்டைமானாறு பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதான இருவரும் கோண்டாவில், தெல்லிப்பழை பகுதிகளைச் சேர்ந்த 50 மற்றும் 41 வயதுடையவர்கள் ஆவர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# யாழில் தொடரும் காணி மோசடிகள் ஐந்து நொத்தாரிசுகள் முன் பிணையில்

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்ப்பாணத்தில், கடந்த சில மாதங்களில் காணி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய ஐந்து நொத்தாரிசுகள் முன் பிணை பெற்றுள்ளனர்.

அதேவேளை மேலும் சில நொத்தாரிசுகள் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு, தற்போது பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையிலும் அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரபல சட்டத்தரணியும் , நொத்தாரிசுமான வரை ஐந்து இலட்ச ரூபாய் சரீர பிணையில், யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்று முன் பிணை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக ஏற்கனவே நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது.

அந்தத் தீர்ப்புக்கு மாறாக மோசடியாகத் தயாரிக்கப்பட்ட உறுதி ஊடாக அந்தக் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது என அது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

அந்நிலையில் குறித்த காணி உறுதிப்பத்திரம் தொடர்பாக அந்த உறுதிப்பத்திரங்களை வரைந்த பிரசித்த நொத்தாரிசும், சட்டத்தரணியுமான ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்பிணை விண்ணப்பத்தை தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இந்த உறுதியை வரைந்த பிரசித்த நெத்தாரிசு உண்மைக்குப் புறம்பாகத் தகவலை இட்டு மோசடியான முறையில் ஆவணம் ஒன்றைத் தயாரித்ததாகக் கூறி அவரைக் கைது செய்ய வேண்டும் என்று பொலிஸார் மன்றிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

சட்டத்தரணிகள் மற்றும் பொலிசாரின் சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளைக்காக நேற்று முன் தினம் புதன்கிழமை குறித்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் போது, நீதிமன்றம் முன் பிணை கோரிய சட்டத்தரணிக்கு 5 லட்சம் ரூபா சொந்த சரீரப் பிணை என முன்பிணை வழங்கி கட்டளையிட்டது.

அதேவேளை குறித்த சட்டத்தரணிக்கு எதிராக ஏற்கனவே நடைபெற்று வரும் காணி வழக்கில் முன்னிலையாக வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டது. (அ)

# இதுவரை இல்லாதளவு யானைகள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 05

இலங்கை சுதந்திரமடைந்த பிறகு இதுவரை இல்லாத வகையில் கடந்த 2023ஆம் ஆண்டு 474 யானைகள் உயிரிழந்துள்ளன.

கடந்த பல வருடங்களாகவே இலங்கையில் தொடர்ச்சியாகவே யானைகளின் இறப்பு அதிகரித்து வருகிறது. இந்த எண்ணிக்கை 2022ஆம் ஆண்டு 439 என்றளவில் இருந்தது. அதற்கு முந்தைய ஆண்டு 375 யானைகள் உயிரிழந்தன. இந்த உயிரிழப்புகளில் மூன்றில் ஒரு பங்கு, யானைகளுக்கும் மனிதர்களுக்கும் உருவாகும் மோதல்கள் காரணமாகவே ஏற்படுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையத்தின் திமுது சந்தருவான் சேனாதீர இது தொடர்பில் கூறுகையில்-

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியைப் பார்க்கும் போது, அதிகளவிலான யானைகள் இறப்பு பதிவாகியுள்ளது.

2023ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 74 யானைகள் உயிரிழந்துள்ளன. ஆனால், அவை எப்படி இறந்தன என்பது பற்றி தகவல் இல்லை.

49 யானைகள் துப்பாக்கிச் சூட்டின் மூலமும் 36 யானைகள் மின்சாரம் தாக்கியும் பலியாகின.

விரைவான நகரமயமாக்கல் மற்றும் யானைகளின் வாழ்விடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்தமை, அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க வேண்டிய கட்டாயம் காரணமாக விவசாயத்துக்காக காடுகளை அழித்தமை ஆகியவையே உலகளவில் யானைகளின் அழிவுக்கு முக்கிய காரணங்களாக உள்ளது.

யானைகள் மற்றும் மனிதர்களுக்கு இடையே ஏற்படும் மோதல்களை தடுக்க அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் என்ன செய்கிறார்கள் என்றால் யானைகளை ஒருங்கிணைத்து அவற்றை ஒரு பகுதிக்குள் தள்ளி பிறகு மின் வேலி அமைக்கிறார். ஆனால், அதற்கு அப்பாற்பட்டு அவர்களால் எந்த தீர்வையும் அளிக்க முடியவில்லை.

சுற்றுச்சூழல் சிறப்பாக இருப்பதற்கு யானைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதேவேளை இப்பிரச்னைக்கான நிரந்தர தீர்வினை காண்பது சுலபமான காரியமல்ல.

யானைகள்-மனிதர்களுக்கு இடையேயான மோதல்களுக்கு நிரந்தர தீர்வு காண்பது கடினம் என்றாலும், யானைகளை பாதுகாக்க இந்தப் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண்பது மிகவும் அவசியமானது என வலியுறுத்தினார். (அ)

# வெள்ளவத்தையில் பொலிஸ் சீருடை அணிந்து கொள்ளையிட்ட கடற்படை சிப்பாய்கள் கைது

கொழும்பு, ஜன. 05

வெள்ளவத்தை பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் போன்று வேடமணிந்து தொலைபேசி விற்பனை நிலையமொன்றில் கொள்ளையிட்ட நால்வர் நேற்று வியாழக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படை சிப்பாய்களாக கடமையாற்றும் 37 மற்றும் 38 வயதுடையவர்களாவர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் குறித்த தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு வந்த இனந்தெரியாத நால்வர் பொலிஸ் உத்தியோகத்தரின் அடையாள அட்டையை காண்பித்து விற்பனை நிலையத்தை பரிசோதனை செய்யவுள்ளதாக கூறியுள்ளனர்.

பின்னர் பணியாளரிடம் கூரிய ஆயுதத்தை காண்பித்து அச்சுறுத்தி 6 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பணமும் பணியாளரின் கையடக்க தொலைபேசியையும் கொள்ளையிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விற்பனை நிலைய உரிமையாளர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாடு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஆயுள்வேத தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிப்பு

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜன. 05

சுகாதாரச் செலவைக் குறைக்கும் வகையில், ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

பாரம்பரிய வைத்தியர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் சுதேச வைத்திய முறையைப் பாதுகாப்பதற்கும் விசேட அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி இவ்வாறு தெரிவித்தார்.

சுதேச மருத்துவத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தலைமைத்துவத்துடன் "பொடி மன்த்ர" உடல் மந்திரங்கள் என்ற பெயரில் ஆயுர்வேத ஆரோக்கிய மையங்களை சுதேச வைத்தியத்துறைக்கு அறிமுகம் செய்யவுள்ளதாகவும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேலும் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி,

இதுவரை நாம் சுதேச மருத்துவத் துறையில் பல சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளோம். ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் சுகாதாரச் செலவுகளைக் குறைக்க முடிந்தது.

பாரம்பரிய மருத்துவத்தை பாதுகாக்க விஷேட பிரிவொன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. பாரம்பரிய மருத்துவத் முறைக்கு ஒரு முறையான நிறுவனம் ஸ்தாபிக்கப்படும் வரை பாரம்பரிய மருத்துவத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இந்த விஷேட பிரிவு நிறுவப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சுதேச மருத்துவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி, அந்த மருத்துவ முறை குறித்து ஆய்வுகள் நடத்தி, முறையான கட்டமைப்பைத் தயாரிப்பதுடன், அந்தத் தொழில்துறை தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இதன் கீழ் இடம்பெறும்.

அது குறித்து கலந்துரையாடிய பின்னர், திறைசேரிக்கு சுமை ஏற்படாத வகையில் பாரம்பரிய மருத்துவத்தைப் பாது காப்பதற்கான ஒரு பிரிவை நிறுவுவதற்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவைக்கு பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஆயுர்வேத கூட்டுத்தாபனம் சுதேச மருத்துவத் துறையில் ஆயுர்வேத சிகிச்சை மையங்களான "பொடி மன்த்ர" (உடல் மந்திரம்) அறிமுகப்படுத்தவுள் ளது. இது சுதேச மருத்துவத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். ஆயுர்வேத சுகா தார நிலையங்கள் மூலம் பட்டதாரி, பயிற்சி பெற்ற மசாஜ் சிகிச்சையாளர்களின் மேற்பார்வையில் உடல் நலப் பாது காப்பு சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

# லிந்துலையில் தீ விபத்து; 3 லயன் அறைகள் தீக்கிரை!

கொழும்பு ஜன. 05

லிந்துலை - பெரிய ராணி வத்தை தோட்டத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தால் 3 வீடுகள் முற்றாக எரிந்துள்ளன.

9 ஆம் இலக்கம் லயன் குடியிருப்பிலேயே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. 10 லயன் அறைகள் குறித்த நெடுங்குடியிருப்பு தொகுதியில் இருந்துள்ளன.

பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், சொத்துகள் சேதம் அடைந்துள்ளன. (அ)



# கடத்தப்பட்ட கார் வயலில் பாய்ந்தது

கொழும்பு, ஜன. 05

எல்பிட்டிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கார் ஒன்று, நிதி நிறுவனம் ஒன்றின் குழுவினரால் கடத்தப்பட்டுள்ளதாக எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நிதி நிறுவனத்தின் அதிகாரிகள், எல்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்து உரிமையாளரிடமிருந்து காரை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றிய காரை ஓட்டிச் சென்றபோது, எல்பிட்டிய, அம்பலாங்கொட பிரதான வீதியின் உரன்வல பிரதேசத்தில் வாகனம் விபத்துக்குள்ளாகி வயல்வெளிக்குள் சென்றுள்ளது.

விபத்தையடுத்து அதில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இறக்குமதியாகும் அரிசிக்கான வரி ஒரு ரூபாவினால் குறைப்பு!

கொழும்பு, ஜன. 05

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கான விசேட சரக்கு (பொருட்கள்) வரியை ஒரு ரூபாவாக குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் அரிசி கிலோ ஒன்றுக்கு 65 ரூபாவாக இருந்த இந்த வரியானது ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள் ளது.

இம்மாதம் 2ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில் விசேட வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டு நிதியமைச்சு வரியை குறைத்துள்ளது. (அ)

# கடலாமை இறைச்சியை வைத்திருந்தவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 05

சட்டவிரோதமாக கடலாமை இறைச்சியை வைத்திருந்த 54 வயதுடைய நபர் ஒருவர் யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியில் வைத்து நேற்று சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 14 கிலோ 800 கிராம் எடையுடைய கடலாமை இறைச்சி மீட்கப்பட்டது.

கைதான நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பிக்மி ஓட்டோ சாரதிகளுக்கு தொடர்ந்தும் இடையூறுகள்

## பொலிஸாரும் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஜன. 05

பிக்மி ஓட்டோ சாரதிகளுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்ட போது நாங்கள் நீதியை பெறுவதற்காக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கச் சென்ற சமயத்தில் எங்களுடைய முறைப்பாடு ஒருதலைப்பட்சமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என யாழ். பிக்மி சாரதிகள் ஒன்றியத்தின் தலைவர் அ.கலைச்செல்வன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் சேவையில் ஈடுபடும் போது தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர். இந்த விடயத்தில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றும் நீதி கிடைக்கவில்லை.

யாழ்.மாவட்ட ஓட்டோச் சாரதிகள் சங்க உறுப்பினர்களுக்கு இடையூறு இன்றி சிறந்த சேவையை வழங்குங்கள் என்று எங்களுடைய சாரதிகளுக்கு உத்தரவிட்டுள்ளோம். அவர்களும் மக்கள் சேவையை சிறப்பாக செய்து வருகின்றனர்.

இருவேறு சந்தர்ப்பங்களில் பிக்மி சாரதிகளுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்ட போது நாங்கள் நீதியை பெறுவதற்காக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்க சென்ற சமயத்தில் எங்களுடைய முறைப்பாடு ஒரு தலைப்பட்சமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதனால் தலைமை ஒருங்கிணைப்பாளரிடம் அறிவித்து பொலிஸ்மா அதிபரிடம் அறிவித்தும் இன்று வரைக்கும் நீதிகிடைக்காமல் விசாரணை முற்றுப்பெறாமல் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

இந்த சேவையை எந்தவித தங்குதடையுமின்றி பாதுகாப்புடன் நேர்த்தியான முறையில் செய்வதற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

நல்லூர்ப் பகுதியில் நேற்று முன்தினமும் செவ்வாய்க்கிழமை கூட எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறோம். தொடர்ந்தும் இந்த நிலைமை ஏற்படாமல் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மக்களுக்கு இலகுவான சேவையை செய்வதற்கு வழியை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

# 27 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் வர்த்தகர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 05

27 இலட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்த வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 48 வயதுடைய வர்த்தகராவார்.

இவர் நேற்று அதிகாலை 04.51 மணியளவில் ஓமான் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

விமான நிலைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் இவர் கொண்டு வந்த 3 பயணப்பொதிகளில் இருந்து 27,120 வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 135 சிகரெட் பெட்டிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை தமிழ் மாணவர்கள் படுகொலை கடற்கரையில் நினைவேந்தல் முன்னெடுப்பு!

**திருமலை, ஜன. 05**
**திருகோணமலை நகரில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு 18 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.**



உள்நாட்டு போர் உச்சமடைந்திருந்தவேளை இடம்பெற்றிருந்த இந்த சம்பமானது மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஒன்று என உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ந்தும் பேசப்படுகின்றது.

சர்வதேச மன்னிப்பு சபை உட்பட சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் இலங்கை அரசு மீது வன்மையான கண்டனத்தை அவ்வேளை வெளியிட்டிருந்தனர்.

திருகோணமலையிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவர்களான இவர்கள், பாடசாலை கல்வியை முடித்த பின்னர் பல்கலைக்கழக உயர் கல்விக்கான அனுமதியை எதிர்பர்த்திருந்தனர்.

இந்நிலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் பொழுது போக்குக்காக கூடியிருந்த வேளை இந்த மாணவர்கள் ஆயுததாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டு காந்தி சிலை சுற்று வட்டத்துக்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.

குறித்த சம்பவம் இடம்பெற்று 18 ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் அவர்களை நினைவு கோரும் முகமாக திருகோணமலை வாழ் பொது மக்களால் ஒன்றிணைந்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(அ)

# வீடு திரும்பினான் சிறுவன்

*மட்டக்களப்பு, ஜன. 05*

வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை பகுதியில் திங்கட்கிழமை காலை காணாமல் போன 14 வயதுடைய சிறுவன் வீடு வந்துள்ளதாக சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் சென்ற குறித்த சிறுவன் முச்சக்கரவண்டி ஒன்றில் மோதுண்டதில் சிறுவனை ஆட்டோ சாரதி தடுத்து வைத்து சிறிது நேரத்தின் பின்னர் விடுவித்துள்ளார்.

இவ்வாறு விபத்துக்குள்ளான சிறுவன் வீடு செல்லும் பயத்தில் தலைமறைவாகியுள்ளதாகவும் சிறுவன் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

(அ)

# யானை தாக்கியமையால் மீன் வியாபாரி படுகாயம்

*மட்டக்களப்பு, ஜன. 05*

யானை தாக்கியதில் நபரொருவர் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 7 மணியளவில் வாகனேரி பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி - மீராவோடை நூராணியா வீதியைச் சேர்ந்த 52 வயதுடைய மீன் வியாபாரி வியாபாரத்துக்கு செல்லும் போதே இவ்வாறு யானை தாக்கி படுகாயமடைந்துள்ளார்.

யானை தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மண்முனைமேற்கு மாதர் சங்கத்தின் பிரதேச மட்ட விற்பனை கண்காட்சி



*மட்டக்களப்பு, ஜன. 05*

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விற்பனை கண்காட்சியானது பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் வழிகாட்டலில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் வவுணதீவில் இடம்பெற்றது.

மாதர் சங்க பயிற்சி நிலையத்தினால் உருவாக்கப்பட்ட ஆடைகள், கைவண்ண பொருட்கள் என பல தரப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டதுடன் அவை விற்பனையும் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள சிரேஷ்ட தையல் போதனாசிரியை , நிர்வாக உத்தியோகத்தர், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நிந்தவூரில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரை வடிந்தோட செய்ய பிரதேச சபையினால் வடிகான் துப்பரவுப் பணி ஆரம்பம்

*அம்பாறை, ஜன. 05*

நிந்தவூர் பிரதேசத்தில் தாழ் நிலப்பகுதிகள் வெள்ள நீரால் மூழ்கியுள்ளதால் மக்களின் நாளாந்த இயல்பு நிலை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

வழமையாக நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் செல்லும் பிரதானவடிகானினூடாக வடிந்து செல்லும் வெள்ள நீர் கடலில் சேர்வது வழமையான ஒன்றாகும்.

பொது மக்கள் சிலரின் ஆய்ந்தோய்ந்து பாராத செயற்பாடுகளினால் வடிகான்களுக்குள் வீட்டுக்கழிவுகள்,விலங்கு கழிவுகள், கண்ணாடி மற்றும் போத்தல் ஓடுகள், திண்மக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகளை இடுவதனால் வடிகான்கள் அடைத்து வெள்ளநீர் வடிந்து செல்லாமையே இவ்வாறு தாழ் நிலங்களில் வெள்ளநீர் நிற்பதற்கான பிரதான காரணமாகும்.



நிந்தவூர் பிரதேச மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் பயனாக வேலைப்பகுதி மேற்பார்வையாளர் ஏ.எஸ்.நிஸாட் பிரதேச சபை ஊழியர்கள் மூலமாக வடிகான்களை துப்பரவு செய்யும் நடவடிக்கையினை துரிதப்படுத்தியுள்ளார்.

(அ)

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 40 வர்த்தகர்களுக்கு அபராதம்

*அம்பாறை, ஜன. 05*

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 40 வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் 1 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய பகுதிகளில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 115 வியாபாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு 40 வியாபாரிகளுக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது டன், ஏனையோருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டை அடுத்தே இச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பொருட்களை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்றமை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, மின் உபகரணங்களின் கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்கள்.

(அ)

# திராய்க்கேணி மக்களுக்கு சமைத்த உணவு வழங்கல்



*காரைதீவு, ஜன. 05*

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள திராய்க்கேணி மக்களுக்கு சமைத்த உணவு நேற்று இரண்டாவது நாளாகவும் வழங்கி வைக்கப்பட்டன.

அங்குள்ள பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. வீதிகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக சேவையாளருமான கி.ஜெயசிறில் அங்கிருந்த மக்களுக்கு தொடர்ந்து சமைத்த உணவை வழங்கி வருகிறார்.

அவருடன் சமூக செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜாவும் கலந்துகொண்டு உணவை வழங்கி வருகிறார்.

மக்கள் வீதிகளில் நின்று அந்த உணவை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இரட்டை குண்டுவெடிப்பால் ஈரானில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

தெஹ்ரான், ஜன. 05

**ஈரானில் அடுத்தடுத்து இடம்பெற்ற இரட்டைக் குண்டு வெடிப்பு சம்பவங்களினால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.**



அமெரிக்க அரசினால் கொல்லப்பட்ட ஈரானின் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் காஸிம் சுலைமானியின் நான்காம் ஆண்டு நினைவு தின நிகழ்வு, அவரது கல்லறைக்கு அருகே நேற்று இடம்பெற்றுள்ள நிலையில், அங்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஏராளமான மக்கள் வருகை தந்துள்ளனர்.

இதன்போது அவரது கல்லறைக்கு அருகே அடுத்தடுத்து இரண்டு சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள நிலையில் ஏராளமானோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காயமடைந்தவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனவும் அஞ்சப்படுகின்றது.

(அ)

# ஜப்பானில் மீண்டும் நிலநடுக்கம்!



ரோக்கியோ, ஜன. 05

ஜப்பானின் ஹோன்ஷூ தீவுக்கு அருகே 40.9 கிலோ மீற்றர் ஆழத்தில் நேற்று காலை நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

காலை 8.16 மணியளவில் ஏற்பட்ட இந்நிலநடுக்கமானது 5.0 என்ற ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் கடந்த 1ஆம் திகதி இடம்பெற்ற சக்திவாய்ந்த நிலநடுக்கத்தினால் 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)



# பயணிகள் சேவைக்காக உலகின் மிகப்பெரிய கப்பல்

நியூயோர்க், ஜன. 05

ஐகோன் ஒப் தி சீஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய பயணக் கப்பல் தமது முதலாவது பயணிகளை வரவேற்பதற்கு தயாராகி வருகின் றது.

2 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கப்பல் புவேர்ட்டோ ரிக்கோ பிரதேச துறைமுகத்தில் சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக நங்கூரம் இடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

1,198 அடி நீளமும் 250,800 டொன் எடையும் கொண்ட இந்த கப்பல் ஒரு சொகுசு கப்பலாகும். 20 அடுக்குகள் கொண்ட இந்த கப்பல் உலக புகழ் பெற்ற டைட்டானிக் கப்பலை விட ஐந்து மடங்கு பெரியது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரமாண்டமான சாப்பாட்டு அரை, ஆறு நீச்சல் குளங்கள் மற்றும் உலகின் எந்தவொரு கப்பலிலும் இல்லாத வகையிலான கடல் நீர் பூங்கா ஆகியவற்றை இந்தக் கப்பல் கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கப்பல் புளோரிடா மாநிலத்தின் மியாமி நகரில் இருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி அன்று தமது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

(அ)

# நீண்ட காலத் தொடர் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ள பிரித்தானிய வைத்தியர்கள்!

## நிலைக்குலைந்துள்ள மக்கள்

லண்டன், ஜன. 05

இங்கிலாந்தில் உள்ள வைத்தியாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் நீண்டகால தொடர் வேலைநிறுத்தத்தைத் ஆரம்பித்துள்ளனர்.

பிரித்தானியாவின் தேசிய சுகாதாரச் சேவை வரலாற்றில் இதுவரை கண்டிராத வேலைநிறுத்தமாக அது கருதப்படுகிறது.

வைத்திய ஆலோசகர் நிலைக்குக் கீழ் உள்ள இளநிலை வைத்தியர்கள் குறித்த வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நீண்டகாலமாகத் தொடரும் பிரித்தானிய அரசாங்கத்துடனான சம்பள விவகாரம் தொடர்பிலேயே இந்த வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய மருத்துவச் சங்கம் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது.

அவ்வறிக்கையில், "வைத்திய தொழில் மீதான நம்பிக்கைக் குறைந்து வருகிறது. இந்தத் துறையில் தொழில்புரியும் பலருக்கு இத்துறையில் நீடிக்க முடியுமா என்ற சந்தேகத்தை கொண்டுள்ளனர்.




எனவே, இந்த நாட்டில் வைத்தியர்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என்பதை அரசாங்கம் உணர்த்த வேண்டும்.

வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வைத்தியர்களுக்கு நியாயமான சம்பளத்தை அரசாங்கம் வழங்க வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானியாவில் குளிர்காலத்தில் மக்களிடையே சுவாசப் பிரச்சினைகள் அதிகரிக்கும். இந்நிலையிலேயே தற்போது வைத்தியர்கள் குறித்த வேலை நிறுத்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதன்காரணமாக பிரித்தானிய மக்கள் பாரிய சிக்கல்கலை எதிர்கொள்ளவுள்ளனர்.

இதற்கு முன்னரும் பண்டிகை காலத்தில் வைத்தியர்கள் மூன்று நாள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக தற்போதைய வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

(அ)

# தாய்வான் வான்வெளியில் சீனாவின் உளவு பலூன்கள்

தாய்பேய், ஜன. 05

தாய்வான் நாட்டு வான்வெளியில் மூன்று சீன பலூன்கள் காணப்பட்டதாக தைவான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபோன்று, கடந்த மாதமும் பலூன்கள் காணப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

சீன பலூன்களை, உளவுக்கருவிகள் என கருதி அமெரிக்கா 2023ஆம் ஆண்டு பெப்ரவரியில் சுட்டு வீழ்த்தியது. இதனால், சீனா உளவு பார்க்க பலூன்களைப் பயன்படுத்துவது அனைத்துலக விவகாரமாக பேசப்பட்டது.

ஆனால், இதைச் சீனா மறுத்தது. பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் பலூன் தவறுதலாகப் பாதை மாறிவிட்டது என்று கூறியது.

தைவானில் ஜனவரி 13 ஆம் திகதி நடக்கவிருக்கும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக சீனாவின் இராணுவ, அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது தொடர்பில் அதிக எச்சரிக்கையுடன் தைவான் உள்ளது.

தைவானின் பாதுகாப்பு அமைச்சு கடந்த மாதத்திலிருந்து, இது போன்று சீன பலூன்கள் தனது நீரிணையை கடந்து சென்றதாக அறிவித்தது.

சீனாவின் இராணுவ நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்த போது, கடந்த 24 மணி நேரத்தில் நான்கு பலூன்கள் அதன் நீரிணையைக் கடந்து சென்றதையும் அவற்றில் மூன்று, தீவின் மையத்தில் பறந்தன என்றும் தைவானின் தற்காப்பு அமைச்சு தெரிவித்தது.

(அ)



# தீவிரமடைந்துள்ளது டெங்கு 23 பேருக்கு எதிராக வழக்கு

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 05

**யாழ்ப்பாணத்தில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான சூழலை கொண்டிருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு உள்ளதாகவும், 189 பேருக்கு எச்சரிக்கை படிவம் வழங்கப்பட்டு உள்ளதாகவும் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் குறைவடையவில்லை. கடந்த செவ்வாய்க்கிழமை 114 பேர் டெங்கு நோய்க்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் பிரதேச மட்டங்களில் பொது சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் விசேட வேலை திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அதன் போது டெங்கு பரவுவதற்கு ஏதுவான இடங்கள் அவதானிக்கப்பட்டால், அதன் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு, தங்கள் குடியிருப்புக்கள் மற்றும் அயல் பிரதேசங்களில் நீர் தேங்கக் கூடிய இடங்கள், பொருட்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

அதேவேளை, டெங்கு தொடர்பான தகவல்களை பெறவும் , முறைப்பாடுகளை வழங்குவதற்கும் 076 179 9901 என்ற தொலைபேசி இலக்கத்தை வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

இந்த இலக்கத்திற்கு 24 மணி நேரமும் தகவல் பெறவோ முறைப்பாடுகளை வழங்கவோ முடியும் என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 50 ஆயிரம் ரூபாய் தண்டம் என்பதில் உண்மை இல்லை

## ஜனாதிபதியின் ஆலோசகர்

கொழும்பு, ஜன. 05

வருமான வரி கோப்பு ஆரம்பிக்காதவர்களுக்கு 50ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படுவதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நூற்றுக்கு 15ஆக இருந்த வற்வரி நூற்றுக்கு 18ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரி கோப்பு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாகப்பட்டிருக்கிறது. இதன் மூலம் வருமான வரி கோப்பு ஆரம்பிப்பவர்கள் அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்பதல்ல.

அது தவறான கருத்து. மாறாக யாராவது எதிர்காலத்தில் வாகனம் அல்லது காணி வாங்குவதாக இருந்தால் அவரிடம் வருமான வரி இலக்கம் இருக்க வேண்டும். அதற்காகவே இதனை கட்டாயப்படுத்தி இருக்கிறோம். மாதத்துக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அதிக வருமானம் உள்ளவர்களே வரி செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

அத்துடன் வருமான வரி கோப்பு ஆரம்பிக்காதவர்களுக்கு 50ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படுவதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை என்றார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் புதன்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

கொழும்பு, ஜன. 05

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.

இப்போதும் கூட ஆளும் கட்சியினர் ஏனைய அரசியல் குழுக்கள் மற்றும் கட்சிகளுடன் இது தொடர்பில் சில கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

எவ்வாறாயினும், பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பில் இதுவரையில் எவ்வித ஆயத்தங்களும் இடம்பெறவில்லை என பாராளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றம் 9இல் கூடுகின்றது

கொழும்பு, ஜன. 05

2024 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த அமர்வு எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 12ஆம் திகதி சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ)

# வரிக்கு விண்ணப்பிக்காதோருக்கு தண்டப் பணம் அறவிட முடியாது!

## ரெலோ கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 05

வற் வரிக்கு விண்ணப்பம் செய்யாத 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தண்டப்பணம் அறவிட முடியாது என்று ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தமது பெயர்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வரி செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம். ஆனால், பதிவு செய்யாவிட்டால் தண்டப் பணம் அறவிடப்படும் என்பது சட்டவிரோதம்.

ஏனெனில், இலங்கையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுபவர்கள் கட்டாயம் வரி செலுத்த வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோரும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்களாக கருத முடியாது. வறுமை கோட்டுக்கு உட்பட்டவர்கள் வரி செலுத்த முடியாது அவர்களின் வருமானம் அதிகரிக்கும் போது வரி செலுத்த முடியும். பதிவு செய்யவில்லை என தண்டம் அறவிட முடியாது.

அதுமட்டுமல்லாது 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் அறிவிடப்படும் என அறிவித்த அரசாங்கம் இவ்வளவு காலமும் வரி வருமானம் செலுத்தாதவர்களுக்கு என்ன தண்டம் என அறிவிக்கவில்லை.

ஆகவே, இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமான வரிக்காக பதிவு செய்வது கட்டாயமாக்குவது நல்ல விடயம். ஆனால், பதிவு செய்யாவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் என கூறுவது சட்டவிரோதம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# காலி சிறையில் கைதி மரணம்

கொழும்பு, ஜன. 05

காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த காலி சிறைச்சாலை கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி - கொட்டாவ கிராமத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பிரேத பரிசோதனையின் பின்னரே மரணத்திற்கான காரணமும் தெரியவரும் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# போதைப்பொருளுடன் காதல் ஜோடி கைது!

வவுனியா, ஜன. 05

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் காதல் ஜோடியொன்று பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அங்கு தங்கி இருந்த காதல் ஜோடியிடம் கஞ்சா மற்றும் தொலைபேசியினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் காதலர்கள் இருவரும் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 05

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழக மீனவர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் 12 மீனவர்கள் கடந்த டிசெம்பர் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, படகின் உரிமையாளருக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஊடாக அழைப்பாணை அனுப்புவது தொடர்பில் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் முன்வைத்த விண்ணபத்தை பருத்தித்துறை நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை நிராகரித்திருந்தார்.

இதையடுத்து, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அரச சட்டத்தரணி நேரில் முன்னிலையாகி படகு உரிமையாளரை வழக்கில் சேர்ப்பது தொடர்பில் மன்றில் விண்ணப்பம் செய்வதற்கு ஜனவரி 10 ஆம் திகதி வரை அவகாசம் வழங்குமாறு கோரியிருந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் குறித்த 12 பேருக்குமான விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதவான் கட்டளை பிறப்பித்திருந்தார்.

இதையடுத்து குறித்த 12 மீனவர்களும் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளினால் முன்னிலைப்படுத்தப்பட்டு மேற்குறித்த விடயம் தொடர்பில் அவகாசம் கோரி மன்றுரைக்கப்பட்டது.

அதனடிப்படையில் 12 மீனவர்களுக்கான விளக்கமறியலை வரும்10 ஆம் திகதி வரை நீடித்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

## இடம்பெயர்ந்த...

குழு விசேட கூட்டத்தில் பங்கேற்றார். இதன்போதே மேற் குறித்த உத்தரவை பிறப் பித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரி வித்தது.

இடம் பெயர்ந் தவர்களை மீள் குடியேற்றுவதில் தற்போதுள்ள பிரச்னை தொடர முடியாது. அவர்களை மீள்குடியேற்றும் பணிகள் 2025ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்.வந்த...

தந்தார் இதன்போது, யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளாகத்துக்கு வெளியே நீர்த் தாரை பிரயோகிக்கும் வாகனங்கள், கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தசமயம், யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கு அருகிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்றது. அந்தப் பகுதியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலிஸார் போராட்டக்காரர்களை தடுத்திருந்தனர்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் நடத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளர் பொன் மாஸ்டர், தமிழ்மதி உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். (ஐ)

## கிழக்கில்...

யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வலுவான கீழைக் காற்றின் வருகை காரண மாக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் எதிர்வரும் 9ஆம் திகதி காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் தொடரும் கனமழையால் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கிராமங் கள் பலவற்றுடனான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரயில்...

நேற்று காலை காலை 6 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் நாளை மறுதினம் காலை 6 மணி வரை தொடரும் என்று தெரிவித்த புகையிரத கடவை காவலர்கள் சங்கத்தின் தலைவர், அந்த நேரத்தில் பயணிகளை பாதுகாப்பாக இருக்குமாறும் தெரிவித்துள்ளார்.

ஒரு தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு 250 ரூபாய் கொடுப்பனவே கிடைக்கிறது. பொலிஸாரின் அடிமைகளாக இருக்கும் எம்மை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் புகையிரத கடவை காவலர் சங்கம் இதன்போது தெரிவித்தது. (ஐ)



நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய தொலைக் காட்சி ஒன்றின் இசை போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற சிறுமி கில்மிஷா உதயசீலனை சந்தித்தார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஏற்பாடு செய்த விருந்துபசாரத்திலேயே இந்த சந்திப்பு நடைபெற்றது. (ஐ)

## யுக்திய...

முன்னெடுப்போம் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

வெலிகமவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட் டுச் சம்பவத்தில் உயிரிழந்த உப பொலிஸ் பரி சோதகர் உபுல் சமிந்த குமாரவின் பூதவுடலுக்கு கலேவெலயில் அமைந்துள்ள அவரின இல்லத்தில் அமைச்சர் நேற்று அஞ்சலி செலுத்தினார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கையில் மிகத் துணிச்சலாக செயல்பட்ட ஓர் அதிகாரியை துரதிர்ஷ்டவசமாக நாம் இழந்துள்ளோம்.

தமது பணிக்காக உயிரைத் தியாகம் செய்தவருக்கு நாம் மரியாதை செய்துள்ளோம். நாங்கள் பாதுகாப்புத் தரப்பினரை ஒருபோதும் கைவிட மாட்டோம்.

எத்தகைய அச்சுறுத்தல் வந்தாலும் நாட்டில் முன்னெடுக்கப்படும் சுற்றிவளைப்பு மற்றும் கைது நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறும். எந்தவித அழுத்தங்களுக்கும் நாம் அடிபணிய மாட்டோம் - என்றார். (ஐ)

## ஐக்கிய...

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு என்று கொள்கை ஒன்றுள்ளது. அந்தக் கட்சியில் நல்ல விடயங்கள் உள்ளமை போன்று குறைபாடுகளும் உள்ளன. கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னமும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்துரையாடவில்லை.

ஒருவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் கட்சி உள்ளது. அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சி பலப்படுத்தப்பட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமடையும் பட்சத்தில் அதனுள் காணப்படும் ஜனநாயக கட்சிகள் நலிவடையும் நிலை ஏற்படும்.

ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவே ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவரை நியமிக்க நேரிட்டது. அதற்குக் காரணம் அவரிடம் உள்ள அனுபவம் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறனாகும். தற்போதைய நிலையில், சிறீலங்கா பொதுஜன பெரமுனவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்கியுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி கிராம மட்டத்திலிருந்து பலப்படுத்தப்பட வேண்டியது அவசியம் - என்றார். (ஐ)

## மின்...

இலங்கை மின்சார சபையின் தலைமை காரியாலயத்ஷதில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்னுற்பத்திக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காகவே கடந்த ஆண்டு இரண்டு முறை மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டது. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மின்னுற்பத்தி தொடர்பான செலவுகள் குறித்த விவரங்களை இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைப்போம் - என்றார். (அ)

## குற்ற...

கஞ்சா, 140 கிலோ அஷீஸ், 11 கிலோ ஐஸ் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு 92 572 கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டன என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 18 உள்நாட்டு மீன்பிடி படகுகளுடன் 187 சந்தேக நபர்களும், ஈரான் படகுடன் 5 ஈரான் பிரஜைகளும், பாக்கிஸ்தான் பிரஜைகள் மூவரும், இரு இந்திய படகுகளுடன் 6 இந்தியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த 191 மதுபான போத்தல்களுடன் 8 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர 41 ஆயிரத்து 380 சிகரட்டுக்களும், 10 இலட்சத்து 16 ஆயிரத்து 755 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டதுடன் 42 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

மேலும், 11 கஜமுத்துக்கள் மற்றும் சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்படவிருந்த 14 கிலோ கிராம் தங்கம் என்பவற்றுடன் 3 உள்நாட்டு படகுகள் கைப்பற்றப்பட்டன. இவற்றுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே போன்று கடந்த ஆண்டு சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த 36 ஆயிரத்து 910 கிலோ பீடி தொகையும், 878 கிலோ புகையிலைத் தூளும், 990 கிலோவுக்கும் அதிக மஞ்சளும், 4 ஆயிரத்து 722 இரசாயன விவசாய உரங்களும், 12 ஆயிரத்து 907 பைக்கெற்றுகளும், 45 ஆயிரத்து 418 அழகு சாதன பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 60 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவை தவிர ஆட்கடத்தலில் ஈடுபட்ட 5 சந்தேக நபர்களும், சட்ட விரோதமாக இந்தியாவுக்கு செல்ல முற்பட்ட 9 பேரும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வர முற்பட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வடக்கின்...

என்றும் அவர் கூறினார்.

வடக்குக்கு நான்கு நாள் பயணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் நடந்த அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்!**

யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் ஆயிரத்து 788 பேர் காணாமல் போயிருக்கின்றனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஆயிரத்து 289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 500இற்குக் கிட்டிய முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அத்துடன், ஜனாதிபதி அடுத்த ஆறு மாதங்களுக்குள் இந்தப் பணிகளை நிறைவு செய்து காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனையுடன் தொடர்புபட்டு செயல்படுமாறும் அறிவுறுத்தினார்.

**வடக்கு அபிவிருத்தி**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி, எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதன்போது, வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டமிடலை தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்துகொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். அத்துடன், நாட்டின் பொருளதாரத்தை மீட்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

**புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு**

புதிய பொருளாதார ஆணைக்குழு நிறுவப்பட்ட பின்னர் எவர் வேண்டுமானாலும் நாட்டுக்குள் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். புலம்பெயர்ந்தவர்களை முதலீடு செய்யுமாறும் அழைப்பு விடுத்தார்.

**வலுசக்தி மையமாக பூநகரி**

வடக்கின் வலுசக்தியை பாதுகாத்து வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்து திட்டமிடல்களும் காணப்படுவதாகவும் பூநகரியை வலுசக்தி கேந்திர நிலையமாக மாற்றுவதாகவும் உறுதியளித்த ஜனாதிபதி வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

**காணி விடுவிப்பு**

வடக்கு மாகாணத்தில் காணி விடுப்பு செயல்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்பு துறைக்கு தேவையான காணிகள் தொடர்பில் பெப்ரவரி மாதமளவில் இறுதி தீர்மானத்தை எடுப்பதாகவும் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு சென்று காணி பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு இதன்போது ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

**குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு**

வடக்கின் குடிதண்ணீர் பிரச்னைக்கு தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்து பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளா தாரத்தை பலப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போல், இந்த வருட இறுதிக்குள் பொரு ளாதார வளர்ச்சி வேகத்தை 3வீதமாக மேம்படுத்தவும், 2025 ஆம் ஆண்டில் 5 வீதமாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## திருமலை 5 மாணவர் படுகொலை விவகாரம்:

# 18 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை!

*சர்வதேச மன்னிப்புச்சபை கடும் விசனம்*

திருமலை, ஜன. 05

திருகோணமலை 5 மாணவர் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 18 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதுகுறித்து உண்மை, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமையுடன் 'திருகோணமலை 5 மாணவர் படுகொலை' இடம்பெற்று 18 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை நகரில் 5 தமிழ் மாணவர்கள் பாதுகாப்புப்படையினரால் கொல்லப்பட்டனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, திருகோணமலை 5 மாணவர் படுகொலைச் சம்பவம் இடம்பெற்று 18 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், அதுகுறித்து உண்மை, நீதி நிலைநாட்டப்படுவதையும், இழப்பீடு வழங்கப்படுவதையும் உறுதிசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது. அதுமாத்திரமன்றி முக்கிய ஆதாரங்கள் இருந்தபோதிலும், அது மூடிமறைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (அ)

# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை நல்லை ஆதீனத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 05

**சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.**



இதன்போது கலந்துரையாடலை தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமான கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் சார்பாக அரசியல் ஆலோசகர் ஜோதிலிங்கம், வடக்கு மாகாண கடற்றொழில் சமாசம் சார்பாக அ.அன்னராசா, தந்தை செல்வநாயகம் அறக்கட்டளையினர், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு கையெழுத்திட்ட மகஜரானது யாழ்ப்பாணத்தில் வைத்து ஜனாதிபதி ரணிலிடம் கையளிக்கப்படவுள்ளது. (அ)

# யாழ்ப்பாணத்திலும் கோவிட் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது சிறந்தது

## வைத்தியர் கேதீஸ்வரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 05

யாழ்ப்பாணத்திலும் பொதுமக்கள் கொவிட் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது சிறந்தது என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று நோயினால் ஒருவர் இறந்துள்ளார். எனவே யாழ்ப்பாணத்திலும் பொதுமக்கள் தற்காப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் கொரோனா தொற்றில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதேபோல இந்த காலப்பகுதியில் சுவாசம் சம்பந்தமான நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்றவை ஏற்படக்கூடும்.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் கொரோனா தற்காப்பு நடைமுறைகளை பின்பற்றுவது சாலச் சிறந்தது - என்றார். (அ)

# மின்சாரத் துறையை அரசாங்கம் தனியார்மயமாக்குவதற்கே முயற்சி

## வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 05

மின்சாரத்துறை மறுசீரமைப்பு செய்வதை வரவேற்கிறோம். ஆனால் மறுசீரமைப்பு என்ற பெயரில் அரசாங்கம் மின்சார சபையை தனியார் மயமாக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறது. தனியார்மயமாக்கல் பிரச்னைக்கு தீர்வு அல்ல என ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரத்துறையில் தற்போதும் பாரியளவில் மாபியாக்கள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் வலுசக்தி நாட்டுக்கு மிகவும் அவசியமானதாகும்.

அதனால் நல்ல சேவை ஒன்றை வழங்குவதற்காக இந்த துறைகளில் மறுசீரமைப்பு மேற்கொள்வது அவசியமன தொன்றாகும். ஆனால் அரசாங்கம் மறுசீரமைப்பு என்ற பேரில் மின்சாரத்துறையை தனியார் மயமாக்கவே நடவடிக்கை எடுத்து வருகிறது. தனியார் மயமாக்குவது இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு தீர்வுகாக அமையப்போவதில்லை - என்றார். (அ)

# வற் வரி அதிகரிப்பு மூலம் அரசு கல்வியை அழிக்க விரும்புகிறதா?

## இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

கொழும்பு, ஜன. 05

புத்தாண்டு தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வற் வரி அதிகரிப்பின் விளைவு, அப்பியாசக் கொப்பிகள் முதல் பாடசாலை போக்குவரத்து சேவைகள் வரை பாதிப்பினை ஏற்படுத்துவதால், நாட்டில் கல்வி தடைப்படும் அபாயம் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கல்வித்துறைக்கு வரி விதிக்க வேண்டாம் என அனைத்து தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், அரசாங்கம் அதனை கருத்திற் கொள்ளாது இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

தற்போது பாடசாலை வேன் சேவையை வழங்குவோர் பெப்ரவரி மாதம் பாடசாலை ஆரம்பித்தவுடன் கட்டணத்தை அதிகரிக்கப்போவதாக தெளிவாக அறிவித்துள்ளனர்.

பெற்றோருக்கு சமையல் எரிவாயுவிலிருந்து கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் 18 வீத வரியை விதித்து பிள்ளைகளின் அப்பியாசப் கொப்பிகள் முதல் அனைத்திற்கும் 18 வீத வரியை விதித்து பாதணி, முதல் புத்தகப் பை வரை வரியை விதித்து போக்குவரத்திற்கும் கட்டணத்தை அதிகரித்த பின்னர் எப்படி வாழ்வது?

அரசாங்கத்திற்கு கல்வி அமைப்பை நடத்த விரும்புகிறதா? அல்லாவிடின் இந்த நாட்டின் கல்வி முறைமையில் சாதகமற்ற நிலையிலுள்ள, எதுவும் இயலாத பிள்ளைகளின் கல்வியை அழிக்க விரும்புகிறதா?

ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வற் வரி திருத்தத்துக்கு அமைய 15 சதவீதமாக இருந்த வற் வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வரி விதிக்கப்படாத 97 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் வற் வரி அதிகரிப்பு பொருந்தும் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

11 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு பிள்ளைக்கு தலா 100 ரூபாய் ஒதுக்கி மேற்கொள்ளப்படும் ஊட்டச்சத்து திட்டத்துக்கு வற் வரியை உயர்த்தியதால் பல சவால்கள் ஏற்பட்டுள்ளன - என்றார். (அ)

# நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குங்கள்!



கொழும்பு, ஜன. 05

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான கோரிக்கையை, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்த தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள வேட்பாளர்கள் இதனை மேற்கொள்வதாக உறுதியளிப்பார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த கால தலைவர்களும் அரசாங்கங்களும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை அரசியல் காரணங்களுக்காக முறியடித்தன.

இந்தநிலையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாத வரையில் இலங்கை ஒரு நாடாக முன்னேற முடியாது. தேசியப் பிரச்சினைக்கு அரசியல் மூலம் மட்டும் தீர்வு காண முடியாது. ஏனெனில் பல்வேறு எதிர்ப்புத் தாக்கங்கள் இருக்கும்.

முன்னதாக 2000 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்தார். இது ஒரு மதிப்புமிக்க முன்மொழிவாக இருந்தது.

ஆனால் அரசியல் காரணங்களால் அதை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. உண்மையில், அந்த நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியே சந்திரிக்கா குமாரதுங்கவின் நடவடிக்கையை எதிர்த்தது.

அத்துடன் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு வரைவின் நகலை எரித்த செயற்பாட்டிலும் ஈடுபட்டது.

இந்தநிலையில் நல்லாட்சி அரசாங்க நாட்களில், புதிய அரசியலமைப்பை நிறுவுவதற்கும் அதன்படி செயற்படுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதுவும் குறுகிய அரசியல் மற்றும் இனவாதக் கண்ணோட்டங்களால் தோல்வியடைந்தது" என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இலங்கை டெஸ்ட் அணியின் தலைவரானார் தனஞ்சய!



கொழும்பு, ஜன. 05

இலங்கை டெஸ்ட் அணியின் தலைவராக திமுத் கருணாரத்னவுக்கு தொடர்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரின் இடத்துக்கு தனஞ்சய டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். தனஞ்சய இலங்கை டெஸ்ட் அணியை வழிநடத்தப் போகும் 18ஆவது வீரராவார்.

கருணாரத்ன 30 டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணிக்கு தலைமை தாங்கினார். இதில், 12 வெற்றிகள், 12 தோல்விகள், 6 போட்டிகள் சம நிலையில் முடிவடைந்தன. 2019இல் தென்னாபிரிக்காவில் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணி மகத்தான வெற்றியைப் பெற்றது. தொடர் தோல்வியில் தடுமாறிய இலங்கை அணி இந்த வெற்றிக்குப்  பின்னர் குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றிருந்தது.

இந்த நிலையில், புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட்டின் அணியின் தெரிவுக் குழு, இலங்கை அணியின் எதிர்கால நன்மை கருதி இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவித்துள்ளது. டெஸ்ட் போட்டிகளில் தலைவராக கருணாரத்ன சிறப்பான பங்களிப்பை வழங்கினார். அணித் தலைவராக அவரின் ஓட்ட சராசரி 49.86ஆக இருந்தது. அவரின் அபார ஆட்டமே இலங்கை அணிக்கு பல வெற்றிகளைப் பெற்றுத் தந்தது. இந்த வெற்றிகளில் முக்கிய தூணாக தனஞ்சய டி சில்வா விளங்கினார். 51 டெஸ்ட் போட்டிகளில் 10 சதங்கள், 13 அரைச்சதங்கள் அடித்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஆரம்பமாகும் ஒரேஒரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு தலைமை தாங்குவார்.

தனஞ்சய டி சில்வாவின் தலைமைத்துவ மாற்றத்துடன் சமீபத்தில் இலங்கை கிரிக்கெட்டின் மூன்று அணிகளுக்கும் மூன்று தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருநாள் அணிக்கு குஷல் மெண்டிஸூம் இருபது - 20 அணிக்கு வனிந்து ஹசரங்கவும் தலைவர்களாக அண்மையில் நியமிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஷ

(ஐ)




## டிராபி டெஸ் சம்பியன்ஸ் கிண்ணம் பி. எஸ். ஜி. வசம்!

பாரிஸ், ஜன. 05

டிராபி டெஸ் சம்பியன்ஸ் கிண்ணத்தை எம்பாப்வே தலைமையிலான பாரிஸ் சென் ஜெர்மைன் அணி கைப்பற்றியது.

பிரெஞ்சு உதைபந்தாட்ட கூட்டமைப்பு டிராபி டெஸ் சம்பியன்ஸ் உதைபந்தாட்ட தொடரை நடத்துகிறது. இது லீக் 1 சம்பியனுக்கும், கூபே டி பிரான்ஸ் சம்பியனுக்கும் இடையே நடைபெறும் போட்டியாகும்.

இதன்படி இந்த வருடம் இதில் பாரிஸ் சென் ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) - துலூஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய பி. எஸ். ஜி. அணி 2-0 என்ற கோல் கணக்கில் துலூஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

பி. எஸ். ஜி. அணி தரப்பில் நட்சத்திர வீரர் எம்பாப்பே மற்றும் லீ கொங் இன் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பி. எஸ். ஜி. அணி இந்த புத்தாண்டை சிறப்பாக தொடங்கியுள்ளது. (ஐ)

# இந்தியா - தென்னாபிரிக்கா டெஸ்ட் முதல் நாளில் 23 விக்கெட்கள் வீழ்ச்சி!

கேப்டவுன், ஜன. 05

இந்தியாவுக்கு எதிரான கடைசி மற்றும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்தியாவின் முகமது சிராஜ் 6 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

கேப்டவுனில் உள்ள நியூலேண்ட்ஸ் மைதானத்தில் தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில்  நாணயச் சுழற்சியில் தென்னாபிரிக்க அணியின் தலைவர் டீன் எல்கர் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். அந்த அணியில் 3 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான டிரிஸ்டன் ஸ்டப்ஸ் அறிமுக வீரராக களமிறங்கினார். லுங்கி நிகிடி, கேசவ் மகாராஜ் ஆகியோரும் களமிறக்கப்பட்டனர்.

இந்திய அணியில் ரவிச்சந்திரன் அஸ்வின், ஷர்துல் தாக்குர் ஆகியோர் நீக்கப்பட்டு ரவீந்திர ஜடேஜா, முகேஷ் குமார் சேர்க்கப்பட்டனர். முகேஷ் குமாருக்கு இது அறிமுக டெஸ்ட் போட்டியாக அமைந்தது.

துடுப்பாட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி முகமது சிராஜின் சீரான வேகம், துல்லியம், ஸ்விங் ஆகியவற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் 23.2 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. முகமது சிராஜ் பந்து வீச்சில் டீன் எல்கர் (4), அய்டன் மார்க்ரம் (2), டோனி டி ஜோர்ஸி (2), டேவிட் பெடிங்ஹாம் (12), கைல் வெர்ரைன் (15), மார்கோ யான்சன் (0) ஆகியோர் நடையை கட்டினர். ஜஸ்பிரீத் பும்ரா பந்தில் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 3, நந்த்ரே பர்கர் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். காகிசோ ரபாடா 5, கேசவ் மகாராஜா 3 ஓட்டங்களில் முகேஷ் குமார் பந்தில் வெளியேறினர்.



முகமது சிராஜ் 9 ஓவர்களை வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களை வழங்கி 6 விக்கெட்களை வீழ்த்தினார். ஜஸ்பிரீத் பும்ரா 8 ஓவர்களை வீசி ஓர் ஓட்டமற்ற 25 ஓட்டங்களை வழங்கி 2 விக்கெட்களையும், முகேஷ் குமார் 2.2 ஓவர்களை வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தென்னாபிரிக்க அணி 1991ஆம் ஆண்டு மறுபிரவேசத்துக்கு  பின்னர் குறைந்த ஓட்டங்களில் (55) ஆட்டமிழப்பது இதுவே முதன் முறையாகும். இதற்கு முன்னர் கடந்த 2018ஆம் ஆண்டு காலி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிராக 73 ஓட்டங்களில் ஆட்டமிழந்து இருந்தது தென்னாபிரிக்க அணி.

இதையடுத்து, துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அணித்தலைவர் ரோஹித் சர்மா அதிரடி தொடக்கம் கொடுத்தார். ஆனால், மற்றொரு தொடக்க வீரரான யஷஸ்வி ஜெஸ்ய்வால் 7 பந்துகளை சந்தித்து ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் ரபாடா பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் களமிறங்கிய ஷூப்மன் கில் நிதானமாக துடுப்பெடுத்தாடினார். மார்கோ ஜோன்சன் வீசிய 10ஆவது ஓவரின் 4ஆவது பந்தை ரோஹித் சர்மா பௌண்ட்ரிக்கு விரட்ட இந்திய அணி 55 ஓட்டங்களை கடந்து முன்னிலை பெறத் தொடங்கியது.

ரோஹித் சர்மா 50 பந்துகளில், 7 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் நந்த்ரே பர்கர் பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் ஷூப்மன் கில் 36 ஓட்டங்களில் வெளியேறினார். அவரை தொடர்ந்து ஸ்ரேயஸ் ஐயர் 0, கே. எல். ராகுல் 8, ரவீந்திர ஜடேஜா 0, ஜஸ்பிரீத் பும்ரா 0 ஓட்டங்களுடன் நடையை கட்டினர்.

நிதானமாக விளையாடிய விராட் கோலி 59 பந்துகளில், 6 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரபாடா பந்தில் வெளியேறினார். தொடர்ந்து சிராஜ் 0, பிரசித் கிருஷ்ணா ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் நடையை கட்ட முடிவில் 34.5 ஓவர்களில் இந்திய அணி 153 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா, நந்த்ரே பர்கர், லுங்கி நிகிடி ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். 98 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்கா முதல் நாள் ஆட்டம் முடிவில் 17 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 62 ஓட்டங்கள் சேர்த்தது. டீன் எல்கர் 12, டோனி டி ஜோர்ஸி 1, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 7 ஓட்டங்களில் வெளியேறினர். அய்டன் மார்க்ரம் 36, டேவிட் பெடிங்ஹாம் 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.



தனது கடைசி டெஸ்ட் போட்டியில் துடுப்பெடுத்தாடிய டேவிட் வோர்ணருக்கு பாகிஸ்தான் அணி மரியாதை அளித்த தருணம்...!

## பாகிஸ்தான் - ஆஸி. டெஸ்ட் மழையால் ஆட்டம் பாதிப்பு!

சிட்னி, ஜன. 05

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 47 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 116 ஓட்டங்களை எடுத்திருந்தது. மழையால் இரண்டாம் நாள் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் இரண்டு போட்டிகள் முடிந்துள்ளன. அந்த இரு போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி விட்டது.

இந்நிலையில் இந்த இரு அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நேற்று தொடங்கியது . இதில் டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது. இதன்படி முதலில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 77.1 ஓவர்களில் 313 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக ரிஸ்வான் 88 ஓட்டங்களும் அமீர் ஜமால் 82 ஓட்டங்களும் எடுத்தனர். அவுதிரேலியா சார்பில் சிறப்பாக பந்துவீசிய அணித் தலைவர் பட் கம்மின்ஸ் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனை தொடர்ந்து களமிறங்கிய ஆஸ்திரேலியா முதல் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்ணர் 6 ஓட்டங்களும் உஸ்மான் கவாஜா ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

இன்று 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. வோர்ணர் கவாஜா இருவரும் சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 70 ஓட்டங்களாக இருந்த போது டேவிட் வோர்ணர் 34 ஓட்டங்கள் எடுத்து ஆகா சல்மான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அவரைதொடர்ந்து கவாஜா 47 ஓட்டங்களில் அமீர் ஜமால் பந்துவீச்சில் வெளியேறினார்.

அவுஸ்திரேலிய அணி 47 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 116 ஓட்டங்கள் எடுத்திருந்த போது திடீரென மழை குறுக்கிட்டது. இதைத் தொடர்ந்து ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. (ஐ)

# தாய்வான் ஜனாதிபதி தேர்தல்: வர்த்தக தடை விதித்து சீனா மிரட்டல்: போர் சூழலை தவிர்க்குமா புதிய அரசு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தாய்வான் தேர்தல்கள் நெருங்கி வரும் நிலையில், புது வருட 2024 பிறப்பின் பின்னர் வார்த்தைப் போர் மேலும் தீவிரம் அடைந்து வருகிறது. தாய்வான் ஆளும் கட்சி சுதந்திரத்தை ஆதரிப்பதை “பிடிவாதமாக” கடைபிடித்தால், தாய்வான் மீது மேலும் வர்த்தகத் தடைகளை விதிக்கும் என்று சீன அரசாங்கம் அச்சுறுத்து உள்ளது.

**தாய்வான் ஜனாதிபதி - பாராளுமன்ற தேர்தல்:**

தாய்வானில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் இரு வாரங்களில் நடைபெறுகின்றன. இத்தீவை தனது சொந்த பிரதேசமாக சீனா கருதுகிறது. சீன இறையாண்மை உரிமை கோரலை ஏற்க தாய்வானை நிர்பந்திக்கவும் முற்பட்டுள்ளது.

தாய்வானின் 8 வது ஜனாதிபதித் தேர்தல் 13 ஜனவரி 2024 அன்று நடைபெற உள்ளது. இவ்வேளையில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தாய்வான் மீது மேலும் வர்த்தகத் தடைகள் விதிக்கப்படும் என சீனா மிரட்டியுள்ளது.

இத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கட்சியின் (டிபிபி) தற்போதைய ஜனாதிபதி சாய் இங்-வென் 2016 முதல் தொடர்ந்து இரண்டு முறை ஜனாதிபதி அலுவலகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எனவே மீண்டும் அவர் தேர்தலுக்குத் தகுதி பெறவில்லை.

**ஜனநாயக முற்போக்குக் கட்சி**

தாய்வானிய தேசியவாதக் கட்சியான ஜனநாயக முற்போக்குக் கட்சியை சுதந்திரத்தை நோக்கி முன்னேறுமாறு அமெரிக்கா ஊக்குவித்துள்ளது. இந்த நடவடிக்கையை பெய்ஜிங் வலிமையுடன் எதிர்க்கும் என்றும் எச்சரித்துள்ளது.

தாய்வான் குறித்து சீனாவை எதிர்க்க தூண்டும் தனது முயற்சிகளில், அமெரிக்கா தாய்வானின் ஜனாதிபதி சாய் இங்-வென் மற்றும் அவரது கட்சியின் ஆதரவை பெரிதும் நம்பியுள்ளது. ஆளும் கட்சி 2023 மார்ச்சில் துணைத் தலைவர் லாய் சிங்-தேவை நியமித்தது. ஏற்கனவே கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுள்ளார்.




**போர் சூழலை தவிர்த்து, புதிய அரசு, பெய்ஜிங்குடனான நட்புறவை பேணுமா என்பதும் தேர்தலின் பின்னரே தெரிய வரும். ஆயினும் வர்த்தக தடை விதித்து சீனாவின் மிரட்டலானது எத்தகைய நட்புறவினை தாய்வான் மேற்கொள்ளும் என்பது சீனாவின் கைகளிலேயே உள்ளது.**

பிரதான எதிர்க்கட்சியான கோமிண்டாங் (KMT) மே 2023 இல் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நியூ தைபே மேயர் ஹூ யு-ஐஹ்வை நியமித்தது. நவம்பரில், ஹூ முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜாவ் ஷா-காங்கைத் தனது துணையாகத் தேர்ந்தெடுத்தார்.

தாய்வான் மக்கள் கட்சி அதன் தலைவரான கோ வென்-ஜேவை தைபேயின் முன்னாள் மேயராக நியமித்துள்ளது. அவர் சட்டமன்ற உறுப்பினர் (சட்டமன்ற உறுப்பினர்) சிந்தியா வூவை தனது துணையாகத் தேர்ந்தெடுத்தார்.

ஹூவின் நியமனத்தை ஆதரிப்பதாக முன்னர் கூறியிருந்த போதிலும், தொழிலதிபர் டெர்ரி கௌ தனது சொந்த முயற்சியை செப்டம்பர் 2023 இல் அறிவித்தார். இறுதியில் நவம்பரில் வேட்பாளர் பட்டியலில் இருந்து வெளியேறினார்.

தற்போது தாய்வானில் எரிசக்திக் கொள்கை, தேசியப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு போன்ற உள்நாட்டுப் பிரச்சனைகள் தேர்தலில் முக்கிய பிரச்சனைகளாக இடம்பெற்றுள்ளன. அயல்நாட்டுப் பிரச்சனைகள் பெரும்பாலும் சீன மக்கள் குடியரசுடனான தாய்வானின் குறுக்கு-நீரிணை உறவுகள் மற்றும் அமெரிக்காவுடனான உறவுகள் எப்போதும் உள்ள நீண்ட கால பிரச்சனைகளாகும்.

**எதிர்க்கட்சி கோமிண்டாங் (KMT)**

கோமின்டாங் மற்றும் தாய்வான் மக்கள் கட்சி ஆரம்பத்தில் 2023 நவம்பரில் கூட்டு வேட்பாளரை களமிறக்க ஒப்புக்கொண்ட போதிலும், இரு தரப்பினரும் இறுதி உடன்பாட்டை எட்ட முடியவில்லை. மேலும் ஒவ்வொருவரும் தங்கள் துணை ஜனாதிபதி வேட்பாளரை பதிவு செய்யும் கடைசி நாளில் அறிவித்தனர்.

தொழிலதிபர் டெர்ரி கௌ, ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடுவதற்குத் தகுதிபெற போதுமான கையொப்பங்களைச் சமர்ப்பித்திருந்தார். ஆனால் பின்னர் அவர் நவம்பர் 24 அன்று தேர்தலில் இருந்து விலகுவதாக அறிக்கை வெளியிட்டார். தாய்வானில் 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவர் 20 மே 2024 அன்று பதவியேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

**சீன வர்த்தகத் தடை:**

தாய்வான் மீது பெய்ஜிங்குடனான வாஷிங்டனின் மோதலில் அவற்றின் தாக்கம் குறித்து இத்தேர்தலிலும் அச்சத்துடனும் கவலையுடனும் உள்நாட்டு ஊடகங்கள் பார்க்கின்றன.

ட்ரம்பைத் தொடர்ந்து பைடென் நிர்வாகமும் தாய்வானுடனான உறவுகளை ஆழமான வகையில் வலுப்படுத்தியுள்ளது. இதன் மூலம், இத்தீவை சீனாவின் ஒரு பகுதியாகவும், பெய்ஜிங்கை அதன் உத்தியோகபூர்வமான அரசாங்கமாகவும் அமெரிக்கா நடைமுறையில்

(16ம் பக்கம் பார்க்க)












# வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது இஸ்ரோவின் 'எக்ஸ்போசாட்' செயற்கைக்கோள்!

ஜான்வி மூலே




இந்தியாவின் இஸ்ரோ விண்வெளி ஆய்வு அமைப்பு புத்தாண்டின் முதல்நாளில் மற்றுமொரு சாதனையைப் படைத்துள்ளது.

சந்திரன் மற்றும் சூரியன் குறித்து ஆய்வு செய்யும் திட்டங்களில் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்திய இஸ்ரோ தற்போது, சூப்பர்நோவா (விண்மீன் வெடிப்பு) உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும் திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ எக்ஸ்போசாட் என்னும் செயற்கைக் கோளை விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பியுள்ளது.

எக்ஸ்போசாட் செயற்கைக்கோள் டிசம்பர் மாத இறுதியில் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஜனவரி முதல்நாளன்று இந்த எக்ஸ்போசேட் செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

எக்ஸ்போசாட் என்பது என்ன? இதன் மூலம் இந்தியா என்ன சாதிக்கப்போகிறது? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.



### XPoSat என்றால் என்ன?

எக்ஸ்-ரே போலாரிமீட்டர் சேட்டிலைட் என்பதன் சுருக்கமே எக்ஸ்போசாட்.

இந்த செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி ராக்கெட் மூலம் விண்ணுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பூமியின் கீழ் சுற்றுப்பாதைக்கு சுமார் 650 கி.மீ. தொலைவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

சுமார் 5 ஆண்டுகள் வரை செயலில் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள், கருந்துளைகளில் இருந்து வெளிப்படும் எக்ஸ் கதிர்கள் குறித்த தரவுகளைச் சேகரித்து, இந்தப் பிரபஞ்சத்தை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.



இப்படிப்பட்ட செயற்கைக்கோள் விண்ணுக்குச் செலுத்தப்படுவது இது உலகிலேயே இரண்டாவது முறை. டிசம்பர் 2021ஆம் ஆண்டில் நாசா மற்றும் இத்தாலிய விண்வெளி முகமை இணைந்து எக்ஸ்-ரே போலாரிமீட்ரி எக்ஸ்ப்ளோரரர் அல்லது IXPE என்றழைக்கப்படும் இத்தகைய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது.

### எக்ஸ் கதிர்கள் குறித்து ஏன் ஆய்வு செய்ய வேண்டும்?

விண்ணில் உள்ள பல அம்சங்கள் குறித்து வழக்கமான ஒளியியல் தொலைநோக்கிகள் மூலம் அதிகமாக அறிய முடியாது. அவற்றின் மூலம் கருந்துளைகள் போன்றவை எதனால் ஆனது, அவை என்ன செய்யும் என்பது குறித்துப் புரிந்துகொள்ள முடியாது.

அதனால்தான் விண்ணிலிருந்து உமிழப்படும் எக்ஸ், காமா, காஸ்மிக் ஆகிய கதிர்கள், ரேடியோ அலைகள் உள்ளிட்டவற்றில் இருந்து விஞ்ஞானிகள் தரவுகளைச் சேகரித்து அவற்றின் மூலம் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.






இந்த எக்ஸ் கதிர்கள், ஆக்ரோஷமான மோதல்கள், பெரும் வெடிப்புகள், அதிவேக சுழற்சிகள் மற்றும் வலுவான காந்தப்புலங்கள் போன்ற அதீத சூழல்களில் வெளிப்படும்.

இந்த அதீத நிகழ்வுகளில் கருந்துளைகளும் அடக்கம். ஆயுட்காலம் முடிவடைந்த விண்மீன் ஒன்று, தன் எடையின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல் வெடிக்கும்போது உருவாகும் துளைதான் கருந்துளை எனப்படுகிறது.

கருந்துளையில் உள்ள ஈர்ப்பு விசை மிகவும் அளப்பரியது. அதனால் அதிலிருந்து ஒளிகூட வெளியேற முடியாது என்பதால், நாம் அவற்றைப் பார்க்க முடியாது. இதனால் அவை குறித்து ஆய்வு மேற்கொள்ள சிறப்புக் கருவிகள் நமக்குத் தேவைப்படுகின்றன.

அதனால், எக்ஸ் கதிர்களை வெளிப்படுத்தும் குவாசர் (விண்வெளியில் அமைந்திருக்கும் ஒளி உட்பட மின்காந்தக் கதிர்வீச்சு ஆற்றலை உமிழும் பெரிய விண்மீன் போன்றவை), சூப்பர்நோவா (பெரும் வீண்மீன் வெடிப்பு), நியூட்ரான் விண்மீன்கள் (விண்மீன் வெடிப்பின் எச்சம்), எக்ஸ்-ரே இருமை விண்மீன் (ஒரு நியூட்ரான் விண்மீன் அல்லது கருந்துளை துணை விண்மீனில் இருந்து வாயுவை உள்ளிழுப்பது) உள்ளிட்டவற்றை ஆய்வு செய்ய எக்ஸ்-ரே தொலைநோக்கிகள் உதவி செய்கின்றன.

நமது பிரபஞ்சம் எப்படிச் செயல்படுகிறது என்பதை அறியவும் அதுகுறித்த மர்ம முடிச்சுகளை அவிழ்க்கவும் இவை குறித்து ஆய்வு செய்வது அவசியமாகிறது.

(16ம் பக்கம் பார்க்க)



# தாய்வான் ஜனாதிபதி தேர்தல்:...

(14 பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரித்துள்ள ஒரே சீனா கொள்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. தேர்தல் முடிவுகளின் பின்னர் பெய்ஜிங்குடனான உறவை தனது அரசாங்கம் எவ்வாறு கையாள உள்ளது பற்றியும் ஆளும் கட்சி அறிவித்துள்ளது.

ஒரே சீனா கொள்கைக்கு ஒரு வெளிப்படையான சவாலாக அமைய தாய்வானின் இருப்பு மற்றும் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் மீதான தாய்வான் மக்களின் வலியுறுத்தல் யாருக்கும் ஆத்திரமூட்டல் அல்ல என்பதை நான் அனைவருக்கும் சொல்ல விரும்புகிறேன். மேலும், “ஜனாதிபதி என்ற முறையில், தாய்வான் மக்கள் தாய்வானாக இருப்பதை உறுதிசெய்ய முடிந்த அனைத்தையும் செய்வதே எனது விருப்பம்” என ஆளும் அதிபர் சாய் கூறியுள்ளார்.

**ஒரே சீனா கொள்கை:**

இந்தத் தேர்தலில் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் முக்கிய காரணிகளாக இருந்த போதிலும், சீனாவுடனான போரைத் தூண்டுவதற்கான அமெரிக்காவின் பகடைக்காயாக தாய்வான் மாற்றப்படுகிறதோ என்பது பற்றிய உண்மையான அச்சத்தையும் பிரதிபலிக்கின்றன.

2024 ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி பதவியில் இருந்து வெளியேறுவது சாத்தியமில்லை. எதிர்க்கட்சிக்கான மோசமான தோல்விக் கருத்துக் கணிப்புகளை சுட்டிக்காட்டி, வாக்களிப்பின் முக்கியத்துவத்தை அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

1949 சீனப் புரட்சியின் போது சீனாவை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர், தாய்வான் அமெரிக்க ஆதரவு அதிகாரத்தை எதிர்கட்சியான கேஎம்ரி நிறுவியது. ஆனால் சீனாவில் முதலாளித்துவத்தை மீட்டெடுத்ததை தொடர்ந்து சீன பிரதான நிலப்பகுதியுடனான நெருக்கமான பொருளாதார உறவுகளை அது இறுக்க தற்போது முற்படுகிறது.

எதிர்வரும் தாய்வான் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பெய்ஜிங்குடனான உறவை புதிய அரசாங்கம் எவ்வாறு கையாளும் என்பதனை மேற்குலகும், மற்றய அயல் நாடுகளும் எதிர்பார்த்துள்ளன.

**போர் சூழலை தவிர்த்து, புதிய அரசு**

பெய்ஜிங்குடனான நட்புறவை பேணுமா என்பதும் தேர்தலின் பின்னரே தெரிய வரும். ஆயினும் வர்த்தக தடை விதித்து சீனாவின் மிரட்டலானது எத்தகைய நட்புறவினை தாய்வான் மேற்கொள்ளும் என்பது சீனாவின் கைகளிலேயே உள்ளது. ●

# வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

**விண்வெளி ஆய்வகம் ஏன்?**

இத்தகைய கதிர்கள் பூமியில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத வண்ணம் அவை பூமியில் நுழைவதை புவிவளிமண்டலம் தடுக்கிறது.

இதன் காரணமாக, இவற்றைப் பூமியிலிருந்து கண்காணிக்கப் பல தடைகள் உள்ளன. எனவே, எக்ஸ்-ரே கண்காணிப்பு ஆய்வகம் விண்ணுக்கு அனுப்பப்படுகின்றது. இது 5 ஆண்டுகள் செயல்படும்

அப்படி அனுப்பப்பட்டதில் மிகவும் பிரபலமான விண்வெளி ஆய்வகம், நாசா அனுப்பிய சந்திரா எக்ஸ்-ரே ஆய்வகம். இதற்கு இந்திய-அமெரிக்க விஞ்ஞானியான சுப்பிரமணியன் சந்திரசேகரின் பெயர் சூட்டப்பட்டது.

ஒளிக்கதிர்கள், புற ஊதாக்கதிர்கள், குறைந்த மற்றும் அதிக ஆற்றல் கொண்ட எக்ஸ்-கதிர்கள் வாயிலாக பிரபஞ்சம் குறித்து ஆய்வுசெய்ய 2015ஆம் ஆண்டில் ஆஸ்ட்ரோசேட் (ASTROSAT) என்னும் ஆய்வகத்தை இந்தியா விண்ணுக்கு அனுப்பியது.

ஆனால், இந்த எக்ஸ்போசாட் எக்ஸ் கதிர்களின் மூலங்களை மட்டுமே ஆராயாமல் அதன் நீண்டகால செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள அவற்றின் துருவ முனைப்பில் கவனம் செலுத்தும்.

**துருவமுனைப்பு மற்றும் போலாரிமீட்டர் என்பது என்ன?**

கண்ணைக் கூசும் ஒளியிலிருந்து தடுக்கும் வகையிலான துருவப்படுத்தப்பட்ட கூலிங் கிளாஸ் மூலமாகப் பார்க்கும் ஒளிக்கும் சாதாரண சூரிய ஒளிக்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் கவனித்திருப்போம். இது ஏன் நடக்கிறது?

ஏனெனில் ஒளி அலைகள் ஒரு கயிற்றைப் போல, அவற்றின் பயணத்தின் திசையைச் சுற்றிச் செயல்படுகின்றன.

ஆனால் அவை சிறப்பு வடிப்பான்களைக் (filter) கடந்து செல்லும்போது, அல்லது வளிமண்டலத்தில் வாயுக்களால் சிதறடிக்கப்படும்போது அவை துருவப்படுத்தப்படலாம் மற்றும் அவற்றின் அலைவுகள் அனைத்தும் வரிசையாக இருக்கும்.

எக்ஸ் கதிர்களும் இதுபோன்றுதான் செயல்படும் மற்றும் துருவமுனைப்பு என்பது அவை அசையும் திசையாகும். இந்தத் திசையைக் கண்காணிக்க போலாரிமீட்டர் உதவுகிறது. மேலும், எக்ஸ் கதிர்களை உமிழும் விண் வெளிப் பொருட்கள் குறித்து முக்கியமான தகவல்களையும் வழங்குகிறது.

இந்த எக்ஸ்போசாட் செயற்கைக்கோளிலும் இத்தகைய ஒரு போலாரிமீட்டர் பொருத்தப்பட்டிருக்கும்.

**எக்ஸ்போசாட்டில் என்னென்ன இருக்கும்?**

எக்ஸ்போசாட்டில் இருவிதமான அறிவியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கும்.

பெங்களூருவில் உள்ள ராமன் ஆய்வு மையம், யூ. ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்துடன் இணைந்து உருவாக்கிய முதன்மை உபகரணமான POLIX பொருத்தப்பட்டிருக்கும். இது வானியல் மூலங்களில் இருந்து உருவாகும் துருவமுனைப்பின் அளவு மற்றும் கோணத்தை அளவிடும்.

மற்றொன்று XSPECT உபகரணம். இஸ்ரோவின் கூற்றுப்படி, இது பிரகாசமான எக்ஸ்ரே மூலங்களின் நிறமாலை மற்றும் துருவப்படுத்தல் அம்சங்களை ஒரே நேரத்தில் ஆய்வு செய்யும் திறன் கொண்டது. ●





